

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 158 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 05 – வெள்ளிக்கிழமை 19 ஜனவரி 2024 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 158: Thiruvalluvar Year - 2055 - Thai 05 - Friday 19 January 2024 - Chennai 20 Pages ₹ 5.00






## கேலோ இந்தியா
## இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023
## தமிழ்நாடு

19 ஜனவரி – 31 ஜனவரி, 2024

# தொடக்க விழா

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளையும் அன்புடன் வரவேற்கிறது




**சிறப்பு விருந்தினர்**

திரு. **நரேந்திர மோடி** அவர்கள்
மாண்புமிகு இந்தியப் பிரதமர்

**முன்னிலை**

திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலந்து கொள்பவர்கள்**

திரு. **அனுராக் சிங் தாக்கூர்** அவர்கள்
மாண்புமிகு தகவல்-ஒளிபரப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள்
மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர், இந்திய அரசு

திரு. **நிசித் பிரமாணிக்** அவர்கள்
மாண்புமிகு இளைஞர் விவகாரங்கள்
மற்றும் விளையாட்டுத் துறை, உள்துறை
இணை அமைச்சர், இந்திய அரசு

திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்,
தமிழ்நாடு அரசு

**இடம் : ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை**
**நாள் : 19.01.2024 | நேரம் : மாலை 6.00 மணி**



வீர மங்கை



தமிழ்

செ.ம.தொ.இ./47/வரைகலை/2024

* அனுமதி : அழைப்பிதழ் உள்ளவர்களுக்கு மட்டுமே

Sportstn_ Sports Tamil Nadu Sports Tamil Nadu Sports Development Authority of Tamilnadu

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 19-01-2024

# குறளும் குதர்க்கவாதிகளும் - 2

பரிமேலழகர் உரை அவருக்கு உடன்பாடானதாக இல்லை. எனவே வள்ளுவர் கருத்துக்கு இணங்க உரை செய்ய வேண்டும் என்றார். அதற்காக குழு அமைத்தார். **“நம் நாட்டின் அரசியல் முதல் மக்களின் ஒழுக்கம் வரை சீர்பட வேண்டுமானால் குறளைப் படியுங்கள்” என்று பிரச்சாரம் செய்தார் பெரியார். “நமக்கு ஒரு வேத நூல், மூல நூல், நெறி நூல், வழிகாட்டி நூல் ஒன்று இருக்கிறதென்றால் அது திருக்குறளேயாகும். அதை நமது மக்கள் படிக்க வேண்டும். மாணவர்களும், புலவர்களும் ஓய்வு நேரங்களில் திருக்குறள் பிரச்சாரம் செய்ய வேண்டும். நீங்கள் என்ன மதத்தினர் என்று கேட்டால், ‘வள்ளுவர் மதம்’ என்று சொல்லுங்கள். உங்கள் நெறியென்னவென்றால், ‘குறள் நெறி’ என்று சொல்லுங்கள்”** என்று சொன்னார். திருக்குறள் எழுச்சி தொடங்கியதும்தான் கம்பராமாயணத்தை தூக்கிக் கொண்டு ஒரு கூட்டம் கிளம்பியது.

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு, குறளாசானைப் போற்றும் அரசாக மாறியது. இது அவர்களுக்கு மிகப்பெரிய சிக்கலாக மாறியது.

**திருவள்ளுவர் பிறந்த காலத்தை கி.மு.31 என்று கணித்தார் மறைமலையடிகள். அதனை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி பார்த்தால் இன்று 2024 என்பதுடன் 31 ஐ கூட்டினால் 2055 என்று வரும். இதுதான் திருவள்ளுவர் ஆண்டு. தமிழறிஞர்களின் இந்த ஆண்டுக் கணக்கை முதல்வர் கலைஞர் 1971 இல் ஏற்றுக் கொண்டு தமிழ்நாடு அரசின் அரசாணையாக வெளியிட்டார். அதுவே இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது.**

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படத்தை வைக்க காரணமானவர் கலைஞர். தமிழ்நாட்டில் ஓடும் பேருந்துகளில் திருவள்ளுவர் படத்தையும், குறளையும் எழுதி வைக்க உத்தரவிட்டார் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர். மயிலை திருவள்ளுவர் கோவிலை சீரமைத்தார் கலைஞர். தலைநகர் சென்னையில் வள்ளுவருக்கு மாபெரும் கோட்டம் கட்டினார் கலைஞர். 1956 ஆம் ஆண்டுமுதல் ‘முரசொலி’யில் ‘குறளோவியம்’ தீட்டத் தொடங்கினார். திருக்குறளுக்கு உரை எழுதினார் கலைஞர். 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கன்னியாகுமரியில் 133 அடி சிலை வைத்தார் கலைஞர். இத்தகைய தனிச்சிறப்புகள் எந்தப் புலவர்க்கும், தனி நூலுக்கும் செய்யப் படவில்லை. இன்று உலகின் அடையாளமாக திருக்குறள் மாற இவைதான் காரணம் ஆகும்.**

குறளின் பெருமையை ஆரிய கும்பலால் குறைக்க முடியவில்லை. உடனே, ‘மனுவில் உள்ளதுதான் குறளில் இருக்கிறது’ என்று கிளம்பினார்கள்.

“வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்

உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி?” என்று பாடியவர் மனோன்மணியம் சுந்தரனார். திருக்குறளை நன்கு உணர்ந்தவர்கள், மனுவை போற்றுவார்களா? என்று கேட்டுவிட்டு, போற்றமாட்டார்கள் என்று சீறியவர் சுந்தரனார். மனு விதைத்தது அறம் அல்ல. இரத்த வேற்றுமை, சாதி உயர்வு, ஆரியர் மேலாண்மை. ஆனால் குறளாசான் சொன்னது, ‘பிறப்பொக்கும்’ என்பதாகும். ‘வேதத்தில் இருப்பதுதான் திருக்குறளில் இருக்கிறது’ என்று நாகசாமி என்பவர் புத்தகம் எழுதினார். அதற்கு உடனடியாக மறுப்பை பதிவு செய்தார், குறளோவியம் தீட்டிய கலைஞரின் கொள்கை வாரிசு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**“வள்ளுவரை சிறுமைப்படுத்தி, திரிபு வாதத்தை முன்வைத்த முன்னாள் தொல்லியல் அதிகாரி நாகசாமியை, செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும் ‘குடியரசுத் தலைவர் விருதுகளை’ தேர்வு செய்யும் கமிட்டியில் உறுப்பினராக நியமித்திருப்பதற்கு தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தமிழ் மொழிக்கு எதிராகவும், தமிழ் கலாச்சாரத்தினை தன் மனம் போன போக்கில் திரித்து பா.ஜ.க. மற்றும் மதவாத சக்திகளின் கவனத்தைத் தன்பால் திருப்பிடும் நோக்கில் எழுதி வரும் அவருக்கு ஏற்கெனவே பத்மவிபூஷண் விருதை வழங்கி கவுரவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, இப்போது செம்மொழி தமிழாய்வு நிறுவனத்திலும் ஒரு பொறுப்பினை வழங்கி செம்மொழித் தமிழுக்கும் பேரிழுக்கு ஏற்படுத்த முயற்சி செய்து பார்த்திருக்கிறது”** என்று அந்த அறிக்கையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். நாகசாமியின் கருத்தை முழுமையாக மறுத்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியும், ஆய்வாளர் மஞ்சை வசந்தனும் தனித்தனியாக நூல்களே எழுதினார்கள். இத்தகைய அறிவியக்கத் தாக்குதலில் ஆரியத்தின் பொய்முகம் கிழிந்தது. அதனால்தான் இறுதியாக அவர்கள் ஆர்.என். ரவியை பிடித்துக் கொண்டுள்ளார்கள்.

ஆளுநர், அவர் சொன்ன ஒவ்வொரு சொல்லுக்கும் பதில் சொல்லியாக வேண்டிய காலம் நெருங்கி வருகிறது. அவர் வாங்கித் தரும் கெட்டபெயர்களும் பா.ஜ.க. கணக்கில்தான் போய்ச் சேர்ந்து கொண்டு இருக்கிறது.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ரத்தபேதம் இல்லை என்கிறது வள்ளுவம். ஒழுக்கம் உள்ளவன் உயர்குடி, ஒழுக்கம் இல்லாதவன் தாழ்ந்தகுடி என்று பிறப்பை மறுத்து ஒழுக்கத்தை வலியுறுத்திய அறநூல் அது. ஆனால் குலநிலை ஒழுக்கம் பேசுகிறது மனு. உழவே உலகத்தார்க்குத் தலை என்கிறது வள்ளுவம். ஆனால், உழவுத் தொழில் இழிவானது என்கிறது மனு. இரும்பை உடைய கலப்பையையும் மண்வெட்டியையும் வைத்து நிலத்தை வெட்டக் கூடாது என்கிறது மனு. பெண்ணை உடைமைப் பொருளாகச் சொல்கிறது மனு. வாழ்க்கைத் துணை என்றார் வள்ளுவர். எனவே அது வேறு, இது வேறு. இது படிக்கத் தெரிந்தவர்கள் அனைவர்க்கும் தெரியும். ஆர்.என்.ரவி வேறு வேலையைப் பார்க்கலாம்.**



கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டை முன்னிட்டு, சேலம் மாநாட்டுத் திடல் நோக்கிய சுடர் தொடர் ஓட்டத்தை சென்னை அண்ணா சாலையில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைகளுக்கு அருகே நேற்று தொடங்கி வைத்து, அண்ணாசாலையில் ஊர்வலமாக நடந்து சென்ற காட்சி! இதில் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நே.சிற்றரசு உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், இளைஞர் அணியினர் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டின் புகழ் மகுடத்தில் மற்றும் ஒரு மாணிக்க முத்திரை!
### கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்- 2023

# பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்!

## ஆளுநர் ஆர்.என்.ரவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகிக்கின்றனர்!

சென்னை, ஜன. 19 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் - 2023-ஐ, சென்னையில் நடத்திட முடிவு மேற்கொண்டதைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசின் உயர் அலுவலர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் அனைவருடனும் இணைந்து இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்கள்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சென்னைக்கு வருகை தந்து கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்துச் சிறப்பிக்குமாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 4-1-2024 அன்று புது டெல்லி சென்று அழைப்பு விடுத்தார்கள்.

இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இன்று (19.1.2024) சென்னைக்கு வருகை தந்து மாலை 6.0 மணிக்கு ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை முறைப்படி தொடங்கி வைக்கிறார்கள்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரம்மற்றும்விளையாட்டுகள், செய்தி மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், ஒன்றிய அரசின் உள் விவகாரங்கள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை இணையமைச்சர் நிசித் பிரமாணிக், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

23-1-2024 அன்று தொடங்கி 31-1-2024 வரை நடைபெறும். இந்த விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் மட்டுமல்லாமல் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களிலும் நடைபெறுகின்றன.

தடகள விளையாட்டுகளான கால்பந்து, கபடி. வாலிபால், ஜூடோ, பளு தூக்குதல், ஸ்குவாஸ், வில்வித்தைகள், குத்துச் சண்டை, பூப்பந்தாட்டம், டேபிள் டென்னிஸ், சைக்கிள், ஜிம்னாஸ்டிக், நீச்சல், ஆக்கி, டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், யோகா, மல்யுத்தம் முதலிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் நம்நாட்டின் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய நிர்வாகப் பகுதிகளிலிருந்து 18 வயதிற்குட்பட்ட வயதுப்பிரிவில் 5,500க்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், 1,600க்கு மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்கின்றனர். இந்த விளையாட்டுப் போட்டிகளைச் சிறப்பாக நடத்திட 1,000க்கு மேற்பட்ட நடுவர்கள், 1,200க்கு மேற்பட்ட தன்னார்வலர்கள் துணைபுரிவார்கள்.

இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023இல் முதல்முறையாக தமிழ்நாட்டின்பாரம்பரியவிளையாட்டான சிலம்பம் உட்பட மொத்தம் 27 விளையாட்டுகள் காட்சி விளையாட்டுகளாக (DEMO Sports) இடம் பெறுகின்றன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொன்றும் நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியவை குறித்த விவரங்கள் விளையாட்டு ஆர்வலர்களுக்கு வசதியாக இணையம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்திய விளையாட்டு ஆணையம், பல்வேறு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திட்டமிட்டுள்ளது.

போட்டிகள் சிறந்த முறையில், நடைபெறுவதற்கான கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்கள் வந்து தங்குதற்கான இடவசதிகள், உணவு வசதிகள், போட்டி நடைபெறும் இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பது குறிப்படத்தக்கதாகும்.

உலகசதுரங்கக்கூட்டமைப்பின் சார்பில் 2022 ஜூலை 28 முதல் ஆகஸ்டு 10 வரை 44வது செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டிகளை மாமல்லபுரத்தில் மகத்தான திருவிழாவாக நடத்திப் உலகளவில் புகழ் குவித்தது தமிழ்நாடு அரசு.

அதேபோல, இந்த கேலோ இந்தியா இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகள் - 2023 தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வெற்றிகரமாக நடைபெற்று, தமிழ்நாட்டின் புகழ், மகுடத்தில் பதிக்கப்படும் மற்றொரு மாணிக்க முத்திரையாக அமையும் என்பது திண்ணம்.

# தி.மு.க. இளைஞர் அணி மாநில மாநாடு - மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்!

## அமைச்சர் கே.என். நேரு பேட்டி!

சேலம், ஜன.19-

சேலம் தி.மு.க. இளைஞர் அணி மாநில மாநாடு மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

**இளைஞரணி 2வது மாநில மாநாடு!**

தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் வருகிற 21-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. இந்த மாநாட்டு பணிகள் அமைச்சர் கே.என். நேரு முன்னிலையில் நடந்து வருகிறது.

இந்த பணிகளை நேற்று பார்வையிட்ட அமைச்சர் கே.என்.நேரு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தி.மு.க. மாநில மாநாடு இந்தியாவையே திரும்பி பார்க்க வைக்கும். தமிழ் நாடு முழுவதும் இருந்து 10 ஆயிரம் பஸ்கள், 50 ஆயிரம் வேன்கள், அதுதவிர கார்கள், லாரிகளில் என சுமார் 5 லட்சம் பேர் வருவார்கள். அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து இருக்கிறோம். வருகிற 20-ந் தேதி தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு திடலுக்கு வருகிறார்.

அப்போது இருசக்கர வாகன ஊர்வலத்தை பார்வையிடுகிறார். தொடர்ந்து 3 ஆயிரம் டிரோன்கள் ஷோ நடக்கிறது. மாநாட்டில் இளைஞர் அணியினர் சீருடையில் கலந்து கொள்ள இருக்கிறார்கள். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஒவ்வொரு மாவட்டமாக சென்று மாநாட்டின் நோக்கம், கட்சியில் உள்ள இளைஞர்களின் பொறுப்பு என்ன என்பதை எல்லாம் கூட்டம் வாயிலாக பேசி வருகிறார்.



எனவே அனைத்து மாவட்ட இளைஞர் அணியினரும் உற்சாகமாக மாநாட்டுக்கு வர இருக்கிறார்கள். இந்த மாநாட்டு ஏற்பாடு தி.மு.க.வினர் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. வருகிற தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை தி.மு.க. பெறும். இந்த மாநாடு மத்தியில் நிச்சயம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மாநாடாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு கூறினார்.



சேலத்தில் ஜனவரி 21–ஆம் தேதி நடைபெறவுள்ள தி.மு.கழக இளைஞர் அணி 2–வது மாநில மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் அருகில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வரவேற்று வழியனுப்பி வைத்தார். அருகில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், பிரபு கஜேந்திரன், மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஆகியோர் உள்ளனர்.

# இளைஞரணி மாநாடு! படைக்கட்டும் இந்தியாவின் புது வரலாறு !!



**உங்களில் ஒருவன்**

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

'எல்லாருக்கும் எல்லாம்' என்கிற இலட்சியத்தைக் கொண்டுள்ள நமது திராவிட மாடல் அரசின் சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளில் தமிழ்நாட்டு மக்களின் மனதில் மகிழ்ச்சி பொங்குகிற வகையில் ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு இவற்றுடன் ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணமும் அரிசி அட்டைதாரர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

பொங்கல் நன்னாளில் ஏழை - எளியோர் புத்தாடை உடுத்திட ஏதுவாகவும், நெசவாளர்களின் வாட்டம் போக்கிடும் செயலாகவும் வேட்டி - சேலைகள் பல ஆண்டுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், இந்த ஆண்டு அவற்றைத் தாமதப்படுத்தாமல் பொங்கல் நேரத்திலேயே வழங்கியது திராவிட மாடல் அரசு. தரமாகவும் அழகாகவும் வேட்டி - சேலைகள் இருப்பதைப் பொங்கல் நாளில் அதனை உடுத்தியிருந்தது தொடர்பான பதிவுகளைச் சமூக வலைத்தளத்தில் கண்டேன்; நெஞ்சத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று!

அனைத்துத் தரப்பு மக்களும் கொண்டாடும் திருநாள்தான் பொங்கல் விழா. அதனைத் தமிழர் திருநாள் என்று இன உணர்வும் மொழி உணர்வும் கொண்ட பண்பாட்டுத் திருவிழாவாக மாற்றிய பெருமை திராவிட இயக்கத்திற்குரியது. எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி, தமிழர்கள் அனைவரும் **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள் நெறியைப் பின்பற்றி வாழ்கின்ற தமிழ் நிலத்தின் உயர்ந்த பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையிலும், மத வெறியை - சாதிய வன்மத்தை - மொழி ஆதிக்கத்தை இங்கே விதைக்க நினைப்போருக்கு ஒருபோதும் இந்த மண்ணில் இடமில்லை என்பதைக் காட்டும் வகையிலும் சமூகநீதி இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 'சமத்துவப் பொங்கல்' விழாவைத் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடுமாறு உங்களில் ஒருவனான நான் அன்பு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.**

உங்களுக்கு அன்புக் கட்டளையிடும்போது, அதனை முதலில் செயல்படுத்தக் கூடியவனாக நான் இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நான் மறப்பதில்லை. அதனால், எனது கொளத்தூர் தொகுதியில் சமத்துவப் பொங்கல் விழாவைப் பல்வேறு மதத்தினர், பல மொழியினர் சூழக் கொண்டாடி மகிழ்ந்தேன்.

அதுபோலவே, **தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் நம்முடைய கழக நிர்வாகிகள் சமத்துவப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடிய செய்திகள் தொடர்ந்து வந்தபோது சர்க்கரைப் பொங்கலாக இதயம் இனித்தது. தலைநகரான சென்னை மாநகரம் தொடங்கி, ஊராட்சிகள் வரை சமத்துவப் பொங்கலின் மணம் வீசியது. இதுதான் திராவிட மாடல் தமிழ்நாடு. இதுவே, இந்திய ஒன்றியம் முழுமைக்கும் தேவைப்படுகிறது. அதனை அரசியல் களத்தில் எடுத்துரைக்கும் வகையில், சேலம் மாநகரில் ஜனவரி 21-ஆம் நாள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெறவிருக்கிறது கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு.**

> **2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கும் சூழலில், ஜனநாயகப் போர்க்களத்திற்குக் கழக வீரர்களை ஆயத்தப்படுத்தும் பயிற்சிப் பாசறையாக அமையவிருக்கிறது, சேலத்தில் நடைபெறும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு. இது கூடிக் கலையும் நிகழ்வல்ல; கொள்கையைக் கூர் தீட்டும் உலைக்களம்! மாநில உரிமை முழக்கத்தை முன்னெடுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு.**

கழகத் தலைவர் என்ற பொறுப்பைச் சுமந்திருக்கும் உங்களில் ஒருவனான என்னை உங்கள் அனைவரிடமும் அடையாளப்படுத்தியது இளைஞரணிதானே! 1980-ஆம் ஆண்டில் மதுரை ஜான்சிராணி பூங்காவில் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் இளைஞரணியைத் தொடங்கி வைத்து, அதனை என் கைகளில் ஒப்படைத்தார். 1982-ஆம் ஆண்டு முதல் இளைஞரணிச் செயலாளராகப் பணியாற்றத் தொடங்கி, 30 ஆண்டுகளுக்கு மேல் அதனை வழிநடத்தி, தலைவர் கலைஞரின் நம்பிக்கையைப் பெற்றேன். 2007-ஆம் ஆண்டு நெல்லை மாநகரில் இளைஞரணியின் முதல் மாநில மாநாடு, வெள்ளி விழா மாநாடாகச் சிறப்பாக நடைபெற்று, அடுத்த தலைமுறையினரைக் கழகத்தின் பக்கம் ஈர்த்தது.

கழகத் தலைமையின் சுமையைப் பங்கிட்டுக் கொள்ளும் அணியாக இளைஞரணி எப்போதும் முன்னிற்பது வழக்கம். இப்போதும் அந்த வழிமுறைப்படி, **2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கும் சூழலில், ஜனநாயகப் போர்க்களத்திற்குக் கழக வீரர்களை ஆயத்தப்படுத்தும் பயிற்சிப் பாசறையாக அமையவிருக்கிறது, சேலத்தில் நடைபெறும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு. இது கூடிக் கலையும் நிகழ்வல்ல; கொள்கையைக் கூர் தீட்டும் உலைக்களம்! மாநில உரிமை முழக்கத்தை முன்னெடுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு.**

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, கழகத்தையும் தமிழ்நாட்டையும் தலைமையேற்று வழிநடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற கழக மாநில மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களை நமக்கு வழங்கினார். அதில் ஐந்தாவது முழக்கம், 'மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி' என்பதாகும். பன்முகத்தன்மை கொண்ட இந்திய ஒன்றியம் வலிமையாக இருக்க வேண்டுமென்றால், மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதே மாநில சுயாட்சிக் கொள்கையின் நோக்கம். அது நிறைவேற்றப்பட்டால்தான், உண்மையான கூட்டாட்சிக் கருத்தியலின்படி இந்திய ஒன்றியம் வலிமையுடன் செயல்பட முடியும்.

பத்தாண்டுகால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மாநிலங்களின் உரிமைகள் பலவும் பறிபோய்விட்டன. கல்வி உரிமை, மொழி உரிமை, நிதி உரிமை, சட்ட உரிமை என மாநிலங்களின் உரிமைகளை ஒன்றிய அரசு அபகரிக்கும் போக்கு தொடர்வதையும், ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரான அராஜகப் போக்கு மிகுவதையும் காண்கிறோம். **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குப் போட்டியாக, நியமனப் பதவியில் உள்ள ஆளுநர்களை வைத்து அரசாங்கத்தை நடத்த நினைக்கும் எதேச்சாதிகாரப் போக்கு என்பது மாநிலங்களுக்கு எதிரானது மட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டத்திற்கே எதிரானதாகும்.**

**ஆளுநர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த பொறுப்புக்குச் சிறிதும் தகுதியில்லாதவர்களாக, மலிவான - தரம்தாழ்ந்த அரசியல் செய்யும் அவலத்தை இந்தியா இப்போதுதான் காண்கிறது.** ஆன்மீக உணர்வுகளை அரசியலாக்கி மத வெறியைத் தூண்டுவது, இந்தி - சமஸ்கிருதத்தைத் திணித்துத் தமிழ் உள்ளிட்ட அவரவர் தாய்மொழிகளையும் அதன் பண்பாட்டையும் சிதைப்பது, **திருவள்ளுவரில் தொடங்கி தெருவில் நடந்து போவோர் வரை எல்லார் மீதும் காவிச் சாயம் பூசுவது என்பதை ஒன்றிய ஆட்சியாளர்களே முன்னின்று செய்கின்ற மூர்க்கத்தனமான அரசியலை ஜனநாயக வழியில் முறியடிக்கும் வலிமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.** அதை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசர - அவசிய தேவை இருக்கிறது என்பதை உணர்த்தக்கூடிய அளவில் சேலத்தில் கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருக்கிறது.

சென்னையையும் பிற மாவட்டங்களையும் கடுமையாகப் பாதித்த மிக்ஜாம் புயல் - மழை காரணமாகவும், தென்மாவட்டங்களில் கடும் தாக்கத்தை ஏற்படுத்திய வரலாறு காணாத மழை - வெள்ளத்தினாலும் இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்ட இளைஞரணி மாநில மாநாடு, ஜனவரி 21-இல் சேலத்தில் எழுச்சியுடன் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாண்புமிகு இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான தம்பி உதயநிதி முன்னெடுத்து வருகிறார். இளைஞரணி நிர்வாகிகள் அனைவரும் அவருக்குத் தோளோடு தோள் நின்று பணியாற்றுவதைக் காண்கிறேன். அதுபோலவே, சேலம் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக உள்ள கழக முதன்மைச் செயலாளர் - மாநாடுகளைச் சிறப்பாக நடத்திக்காட்டுவதில் வல்லவரான மாண்புமிகு கே.என்.நேரு அவர்களும், சேலம் மாவட்டக் கழக நிர்வாகிகளும் பந்தல் அமைப்பு தொடங்கி அனைத்து ஏற்பாடுகளையும் இரவு - பகலாக மேற்கொண்டு வருகிறார்கள்.

இளைஞரணி மாநில மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தும் வகையில் தமிழ்நாடு தழுவிய அளவில் இருசக்கர வாகனப் பேரணியை கண்கவரும் வகையில் நடத்திக் காட்டிய இளைஞரணி நிர்வாகிகள், இன்று (ஜனவரி 18) காலையில் சென்னை சிம்சன் அருகே உள்ள பெரியார் சிலையிலிருந்து சுடரேந்தித் தொடர் ஓட்டத்தைத் தொடங்கியுள்ளனர். இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி தொடங்கி வைத்த இந்தச் சுடரோட்டம் சேலம் வரை தொடர்கிறது.

இந்த நேரத்தில், நான் நினைத்துப் பார்க்கிறேன். காஞ்சிபுரத்தில் 1972-ஆம் ஆண்டு நடந்த மாநில சுயாட்சி மாநாட்டின்போது, கோபாலபுரம் இளைஞர் தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவிடத்திலிருந்து அண்ணா ஒளிச்சுடரை ஏந்தி - ஓடி, மாநாட்டு மேடையில் தலைவர் கலைஞர், நாவலர், இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் நான் வழங்கியது என் நினைவுக்கு வருகிறது. சேலத்தில் நடைபெறும் மாநில மாநாட்டிற்காக இளைஞரணியினர் ஏந்தியுள்ள ஒளிச்சுடர், காலம்தோறும் கொள்கை வெளிச்சம் பாய்ச்சிடும் அணியாக இளைஞரணித் திகழும் என்பதை மெய்ப்பிக்கிறது. மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகின்ற உங்களில் ஒருவனான நானும் மனதளவில் என்றும் என்னை இளைஞனாகவே கருதுகிறேன்.

நான் வளர்த்து ஆளாக்கிய அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் பங்கேற்பதில் ஒரு தாயின் உணர்வுடன் பெருமிதம் கொள்கிறேன். தொடர்ச்சியான பணிகள் காரணமாக, மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து ஒன்றிரண்டு கடிதங்களே என்னால் எழுத முடிந்தது. எனினும், இளைஞரணியின் 25-ஆம் ஆண்டினையொட்டி 2007-ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற இளைஞரணியின் முதலாவது மாநில மாநாட்டின்போது, நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புகளுக்கு எழுதிய 25 கடிதங்களை முரசொலியின் ஒவ்வொரு நாளும் முதல் பக்கத்தில் மீண்டும் வெளியிட்டு, இன்றைய தலைமுறையினருக்கு வரலாற்றுப் பாடத்தைக் கற்றுத் தந்திருக்கிறது கழகம்.

மாநாட்டு நாள் நெருங்கி வரும் நிலையில், உங்களில் ஒருவனான நான் இந்த மடலை எழுதுகிறேன். நாடாளுமன்றத் தேர்தலும் நெருங்கி வருகிறது. **ஜனநாயகத்தின் அடர்ந்த இருண்ட காலத்திலிருந்து இந்தியாவை மீட்டெடுத்து, மீண்டும் ஒரு விடுதலை வெளிச்சம் நிறைந்த காலத்தினை மக்கள் காண்பதற்கு இந்தியா கூட்டணியின் முன்னெடுப்புகள் தொடங்கியுள்ளன. இந்தப் பொருத்தமான சூழலில்தான், மாநில உரிமை மீட்பு முழக்கத்தினை மையமாகக் கொண்டு இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறுகிறது.**

தம்பி உதயநிதி அழைக்கிறார். கழக உடன்பிறப்புகளே சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாட்டில் திரண்டிடுவீர். நான் முன்பே சொன்னதுபோல கடல் இல்லாச் சேலம் மாவட்டம், கருப்பு - சிவப்புக் கடல் ஆகட்டும். இந்தியாவின் ஒளிமிகுந்த புது வரலாற்றை இளைஞரணி படைக்கட்டும்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
தை 04
18.01.2024.

## உங்களுக்கு உதவிட நாங்கள் எந்நேரமும் தயாராக இருக்கிறோம்!

# கழகம் என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும்!

## தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜன. 19–**

**சென்னையில் நடைபெற்ற கழகச் சொற்பொழிவாளர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது “உங்களுக்கு உதவிட எந்நேரமும் நாங்கள் தயாராக இருக்கிறோம்! நீங்கள் இல்லாமல் கழகம் இல்லை” என்று உருக்கமுடன் கூறினார்.**

சென்னையில் நேற்று (18.1.2024) தலைமைக் கழக சொற்பொழிவாளர்களுடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து உரையாடி அவர்களுக்கு தமிழர் திருநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:

“இந்த நிகழ்ச்சியைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அண்ணன் திருச்சி சிவா அவர்கள் என்னை தூக்கி வளர்த்தவர். அவருக்கும் தலைமைக் கழக சொற்பொழிவாளர்களுக்கும், வந்திருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி, ஒரு வித்தியாசமான நிகழ்ச்சி. பொங்கலுக்கு முன்பாகவே இந்த நிகழ்ச்சியை நடத்தவேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். ஆனால், தொடர்ந்து மாநாட்டுப் பணிகள், அரசு பணிகள் இருந்தன. அதனால் பொங்கலுக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு சரியாக திட்டமிட்டு இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**என்னுடைய நன்றி!**

முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் உங்களை எல்லாம் சந்திக்கும் போது உங்களுக்கு ஒரு நினைவு பரிசு தர வேண்டும் என்று நினைத்து ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், நீங்கள் ஒவ்வொருவரும், உங்களுடைய நினைவு பரிசை அளித்திருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றி.

நான் கழகத்தின் மூத்த முன்னோடிகளையெல்லாம் சந்தித்துப் பொற்கிழி வழங்கும் பொழுது ஒரு நிகழ்ச்சியை அடிக்கடி சொல்வேன். தந்தை பெரியாரை நான் நேரில் பார்த்ததில்லை, பேரறிஞர் அண்ணாவையும் பார்த்தது இல்லை. கலைஞரை நேரில் பார்த்திருக்கிறேன், இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால், கழகத்தின் மூத்த முன்னோடிகள் உங்களையெல்லாம் பார்க்கும்போது பொறாமையாகவும் அதேசமயம் பெருமையாகவும் இருக்கும். ஏனென்றால், நீங்கள் அத்தனை பேரும் தந்தை பெரியாரை நேரில் பார்த்திருப்பீர்கள்.

தந்தை பெரியாருடன் போராட்டக் களத்திற்குச் சென்றிருப்பீர்கள். சிறைவாசம் செய்திருப்பீர்கள் பேரறிஞர் அண்ணாவுடன் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றிருப்பீர்கள். பொதுக் கூட்டங்களுக்குச் சென்றிருப்பீர்கள். எனவேதான் உங்களை எல்லாம் பார்க்கும் பொழுது எனக்குப் பொறாமையாக இருக்கிறது என்று சொல்வேன்.



அடுத்தது இன்னொரு வரியும் சொல்வேன் அது என்னுடைய உள்ளத்தில் இருந்து வருகின்ற வார்த்தை. வந்திருக்கக் கூடிய உங்கள் அத்தனை பேரையும் தந்தை பெரியாரின் மறு உருவமாக, பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மறு உருவமாக நம்முடைய இனமான பேராசிரியர் தாத்தாவின் மறு உருவமாகத்தான், இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொருவரையும் நான் பார்க்கின்றேன்.

**மிகுந்த உணர்ச்சிபூர்வமாக இருக்கிறது!**

ஏனென்றால், ஒவ்வொருவரையும் அந்தந்த மாவட்டங்களுக்கு வரும் பொழுது பல முறை சந்தித்து இருக்கிறேன். புகைப்படம் எடுத்திருக்கிறேன். ஆனால், கழகப் பேச்சாளர்கள் அத்தனை பேரையும் ஒரே இடத்திற்கு வரவழைத்து, உங்களைச் சந்திப்பதில் மிகுந்த உணர்ச்சிபூர்வமாக இருக்கிறது. இதைச் செய்யச் சொல்லி கட்டளையிட்டது, நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்.

இந்தத் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதில், ஒரு சின்னச் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது, ஒரு தயக்கம் ஏற்பட்டிருக்கிறது அதைச் சரிசெய்ய வேண்டும். அதற்குக் காரணம் நீங்கள்தான். வேகத்தில் ஆதங்கத்தில் எதையாவது பேசி விடுகிறீர்கள். அ.தி.மு.க.வாக இருக்கட்டும் பா.ஜ.க வாக இருக்கட்டும். நாம் பேசுவதை எல்லாம் வெட்டி ஒட்டி, அவதூறு பரப்புகிறார்கள். எனவே உங்களிடம் நான் கேட்டுக் கொள்வது கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு நம்முடைய பேச்சுக்கள் இருக்க வேண்டும். கண்டிப்பாக நான் உங்களுக்குப் பாடம் எடுக்கத் தேவையில்லை. நீங்கள் எல்லோரும் எனக்கு பாடம் எடுக்கக்கூடியவர்கள். அந்தளவுக்கு நீங்கள் சீனியர்கள்.

கலைஞருடைய நூற்றாண்டில் கலைஞருடைய பெருமைகளை எல்லாம் பேசுகிறோம். கலைஞர் ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்டார். ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சர். அப்படி என்றால், அதற்கு இங்கே வந்திருக்கக்கூடிய கழகத்தின் பேச்சாளர்களாகிய நீங்கள் முக்கியமான காரணம்.

நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது. நீங்கள் இல்லாமல் இந்த ஆட்சி கிடையாது. நீங்கள் இல்லாமல் நம்முடைய தலைவர் கிடையாது. நீங்கள் இல்லாமல் தி.மு.க கிடையாது. எனவே உங்களையெல்லாம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

**கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்!**

நம் கழகத் தலைவர் அவர்களிடம் பேசி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி செய்வேன். வந்திருக்கக்கூடிய பலர், சில கோரிக்கைகளை வைத்து இருக்கிறீர்கள், மனுக்கள் கொடுத்திருக்கிறீர்கள். கண்டிப்பாக ஒவ்வொரு மனுவாக எடுத்து, அதை ஆய்வு செய்து, அதைத் தீர்ப்பதற்கான அனைத்துப் பணிகளிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்வேன்.

இது தொடக்கம்தான். இன்னொரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். இது சமூக வலைத்தள யுகம். தெருமுனைக் கூட்டங்களில் பேசுவதை மாதிரி யூ ட்யூபில் பேச முடியாது அதற்கென்று ஒரு ஸ்டைல் இருக்கிறது.

டிவி இன்டர்வியூவில் பேசுவது மாதிரி, ஒருத்தர் பிரச்சாரக் கூட்டத்தில் பேச முடியாது. எனவே, இப்போது சோசியல் மீடியா அதிகமானதால், நீங்கள் அத்தனை பேரும் சோசியல் மீடியாவிலும் நீங்கள் ஆக்டிவாக இருக்க வேண்டும்.

**யூ ட்யூப் சேனல் தொடங்குங்கள்!**

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு youtube சேனல் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு அன்பகத்திலிருந்து எங்களுடைய டீம் உங்களுக்குத் துணை புரியும். அதேபோல் உங்களுக்கு எந்தவிதமான மருத்துவ உதவியாக இருந்தாலும், உங்களுடைய குடும்பத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளின் கல்வி உதவியாக இருந்தாலும் அன்பகத்தில் இருந்து உங்களுக்கு எந்நேரமும் உதவுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இன்று உங்களையெல்லாம் அழைத்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது சேலத்தில், நம் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 21ம் தேதி நடக்க இருக்கின்றது. அதற்கு உங்களிடம் வாழ்த்து வாங்குவதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியை நடத்துகிறோம். உங்களுடைய வாழ்த்துக்களோடு அந்த இளைஞர் அணி மாநாடு சிறப்பாக நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

தமிழ்நாட்டின் பல ஊர்களில் இருந்து வந்திருக்கிறீர்கள். பத்திரமாக நீங்கள் அனைவரும் ஊருக்குச் சென்று சேர வேண்டும்.

அண்ணன் திருச்சி சிவா அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி ,வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பிரபு கஜேந்திரன், ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார், மேலாளர் பத்மநாபன் உள்ளிட்ட அறிவாலயம் பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில் இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் - சைதை கிழக்கு

## கோட்டூர் ஆர். ராஜ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் துரைமுருகன் வாழ்த்துகிறார்!

**அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - சா.சி.சிவசங்கர் பங்கேற்பு**

சென்னை, ஜன. 19-

சைதை கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் ஆர். ராஜ்குமார் - ஆர்.காஞ்சனா ஆகியோரது மகள் ஆர்.ரம்யா, ஆவடி ரவிச்சந்திரன் - உமாதேவி ஆகியோரது புதல்வர் ஆர். மணிஷ்குமார் ஆகியோரது திருமணம் 21.1.1024 ஞாயிறு காலை 7.30 மணிக்கு -9.00 மணிக்குள்ளாக இராமாபுரம் ஜோதி மகாலில் நடைபெறுகிறது.

மணமக்களின் வரவேற்பு நிகழ்ச்சி 20.1.2024 சனிக்கிழமை இரவு 6.00 மணி முதல் நடைபெறுகிறது. வரவேற்பு நிகழ்ச்சிக்கு துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் தலைமை தாங்குகிறார். பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



இ.முருகேசன், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, கோ.சண்முகம், க.மணி, எஸ்.ஜே.சலாம், எஸ்.ரவி, கணேசன், இ என்.பாபு, மு.மகேஷ்லாரன்ஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக பொதுச் செயலாளர் - நீர்வளம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர்கள் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சா.சி. சிவசங்கர் மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.எல்.ஏ.க்கள் ப.தாயகம்கவி, எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

மேலும் மாவட்ட நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன், சைதை சம்பத் , மா.அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் , களக்காடி எல்லப்பன், த. சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், நா.ராதாகிருஷ்ணன், சைதை மு.இராஜா, எல்.ஆரோக்கியராஜ், நேருநகர். எஸ். பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன், சைதை சாதிக் , நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், வழக்கறிஞர் த. பாபு, எஸ்.பிரகாஷ், ஆர். கிருஷ்ணகுமார், ஆர்.சேதுராமன், எஸ்.புவனேஸ்வரி, ஏ.பார்வதி, ஏ.கௌதமன், சே.அருண், ஆ.தேவக்குமரன், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ராதாகிருஷ்ணன், என். .நந்தகோபால், டி.வி.நரசிம்மன், க.உமாபதி, ஜி.செல்வராஜ், ச.சேகர், வே.ரமேஷ் குமார், ஜி.யோவான், வே.முரு கன், ஏ.மஜித், கோ.மதிவாணன், கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி , கிண்டி ஆர்.எல்.செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ. மதிவா ணன், பொன். ஜெய்சிங், ஆர்.ரவி, சைதைஜி.பாபு மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

பா.சிவலிங்கம், மு.பலராமன், ப.தினகரன்,கே. கோவிந்த்ராஜிலு, பா.பூமிநாதன், எஸ்.பிரகாஷ் ஆகியார் நன்றி கூறுகின்றனர். கெ.வரதன், க.வேதகிரி, எம்.பாலகிருஷ்ணன், என். மாரி, ச.கோபு, த.ராமகிருஷ்ணன், வே.முருகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 17 வது வட்டம் செட்டிமேடு பகுதியில் திருவள்ளுவர் தினம் மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு 300 குடும்பத்தாருக்கு ஐந்து கிலோ அரிசி, கரும்பு, காலண்டர், மற்றும் பொங்கல் பை, காலை உணவு முதலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன், சீ.மூர்த்தி, சி.பாலாஜி, எஸ். சிவக்குமார், கே.சண்முகப்பிரியன், ஜான்சன் பூபாலன் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டார்கள்.

---

## சென்னை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா சிறப்புரை!

சென்னை, ஜன.19-

சென்னை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஆர்.டி.சேகர் ஆகியோரின் முன்னிலையில் நேற்று மாலை டி.எச். ரோடு அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருகின்ற 21.1.2024 அன்று நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில் பங்கேற்பது மற்றும் 19.01.24 அன்று நடைபெற இருக்கின்ற கேலோ விளையாட்டுப் போட்டியினை, தொடங்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களையும், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், சென்னை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சிறப்பாக வரவேற்பளிப்பது தொடர்பான ஆலோசனைகளை மாவட்ட கழக செயலாளர் தா.இளையஅருணா வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்த நாள் மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.வி லஷ்மி வேலு ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் தா.இளையஅருணா கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் மளிகை பொருட்கள் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு பேக் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், மு.கோபி, நா.சண்முகம், கு.ரமேஷ், மலையம்மா திருஞானம், கார்த்திக், செங்குட்டுவன், வேலுமணி, ஹரீஸ், சோமசுந்தர மூர்த்தி, கொளீஸ்வரன், குருவம்மா, கோமதி பொற்செழியன், மேகலா, திருமலை, மகேஸ்வரி, கலைவாணி, பவித்ரா, நரேஷ், சம்பத் குமாரி, நெடுஞ்செழியன், சுசீலா, தென்றல், கலைவாணி, சுரேகா, பாம்பே லட்சுமி, ஷீலா, விஜயா, பூங்கோதை, பிருந்தா, சிவகாமி, பெரம்பூர் பூங்கோதை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இரா.பாலன், எம்.எல்.ரவி நன்றி கூறினர்.

# ஆளுநர் போன்றோரின் நரித்தனங்களை வாலறுத்த பூமி தமிழ்நாடு!

**எப்படி நினைப்பது இந்த மனிதரை?**
**வக்ரபுத்திக்காரர் என்பதா?**
**குறுமதியாளர் என கணிப்பதா?**
**சேடிஸ்ட் என எண்ணுவதா?**
**திருந்தாத ஜென்மம் எனத் தீர்மானிப்பதா?**

– எந்த மனிதர் குறித்து இத்தனைப் பீடிகை என்பது சொல்லாமலே புரிந்திருக்கும். இத்தனை குணங்களுக்கும் ஒற்றை உதாரணமாக நடமாடிக் கொண்டிருக்கிறார் நமது ஆளுநர் ரவி! அவருடைய சேட்டைகளுக்கு அளவே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.

**சில குரூர புத்திக் கொண்டவர்கள் திடீரென அம்பேத்கர் சிலையில் தார் பூசுவார்கள். இன்னும் சில சின்னப் புத்தியினர் தந்தை பெரியார் சிலைக்கு கருப்பு வண்ணம் அடிப்பார்கள். இன்னும் சில சிறுமதியாளர்களை அண்ணா, வள்ளுவர் சிலை களுக்கு காவித் துண்டு அணிவிப்பார்கள்! –**

**இப்படி மூளை வளர்ச்சியற்றவர்கள் இரவோடு இரவாக செயல்படுவர்! பிடிபட்ட பின் அதில் சிலர் மன நலம் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர் – இன்னும் பலர் அறிவு முதிர்ச்சி அற்றவர்களாக விளங்குவர். இப்படி செய்திகள் அவ்வப்போது ஏடுகளில் வரும்!**

அத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை மிஞ்சிடும் வகையில் வள்ளுவருக்கு நமது ஆளுநர் காவி வண்ணம் பூசி, நெற்றி கை கால்களெல்லாம் விபூதிப் பட்டைகளை அணிவித்து, அந்தப் படத்தை வைத்து தனது மனைவி சகிதம் அதற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியுள்ளார்!

இதே ஆளுநர் அவரது மனைவி மற்றும், ஒன்றிய இணை அமைச்சர் முருகன் உடனிருக்க, ஓவிய மேதை திரு.கே.ஆர்.வேணுகோபால் சர்மா பல ஆண்டுகள் ஆராய்ந்து, சிந்தித்து, பெரும் தமிழறிஞர்கள் அங்கீகாரத்துடன் வரைந்து அளித்து, தமிழ்நாடு அரசால் ஏகமனதாக ஏற்கப்பட்ட வள்ளுவர் படத்துக்கு; முந்தைய வள்ளு வர் தினத்தன்று மரியாதை செலுத்தியுள்ள நிலையில், ஏன்; தற்போது திடீர் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைச் சிந்திக்கும் போது, ஆளுநர் மன நிலையில் இப்படி அடிக்கடி ஏற்படும் தடுமாற்றங்கள் குறித்து சராசரி மனிதன் சந்தேகம் கொள்வது இயற்கைதானே!

வள்ளுவர் தினத்தன்று வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி அவர்கள், “திருக்குறளில் உள்ள வள்ளுவரின் ஆழ்ந்த



ஞானம் வாழ்க்கையில் பல அம்சங்களில் நமக்கு வழி காட்டுகிறது. காலத்தால் அழியாத அவரது போதனைகள் நல்லொழுக்கம் மற்றும் நேர்மையில் கவனம் செலுத்த சமூகத்தை ஊக்குவிக்கிறது. **நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு கொண்ட உலகத்தை உருவாக்குகிறது. அவர் எடுத்துரைத்த அனைவருக்குமான விழுமியங்களைத் தழுவுவதன் மூலம் அவரது தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றிடுவோம்”.**



அடுக்குமா இந்த மூர்க்கமான கலாச்சார படையெடுப்பு ?????

– எனச் சரியான புரிந்துணர்வோடு வள்ளுவருக்கு எந்தவித மதச்சாயமும் பூசாமல் வள்ளுவர் தின வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ள நிலையில், நமது ஆளுநர் மட்டும் வள்ளுவர் குறித்து சரியான புரிதல் இன்றி அரைவேக்காட்டுத்தனத்தோடு வள்ளுவரை அணுகியுள்ளார் என்பதை அவரது வள்ளுவர் தின வாழ்த்துச் செய்தி எடுத்துக் காட்டுகிறது!

“பாரதிய சனாதனப் பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி” – என வலிந்து ‘வள்ளுவர்’ எனும் பெருமலையை சனாதன ‘நூல்’ கட்டி தனது பக்கம் இழுக்க முயற்சி செய்துள்ளார்! வள்ளுவர் படத்துக்குக் காவி வண்ணம் மட்டும் பூசவில்லை கவர்னர் ரவி; அவரது வாழ்த்துச் செய்தியில் வர்ணாசிரமத்தையும் புகுத்தியுள்ளார்!

ஆம்; மொழி, இனம், காலம், நாடு, மதம் கடந்து வாழ்வோடு, வாழ்வியலோடு பொருந்திக் கிடக்கும் குறள் படைத்த அய்யனை, கொச்சைப்படுத்தும் வகையில், அவருக்குக் காவிச் சாயம் பூசி, பட்டை தீட்டி, பாரதிய சனாதனத்தை பரப்பிவிட்டதாகப் பரவசம் கொண்டுள்ளார் ஆளுநர்!

எத்தனை சூடுபட்டாலும் திருந்தாது திரும்பத் திரும்பத் தனது வக்ரத்தனத்தைக் காட்டிக் கொண்டே இருக்கும் இவரை; இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள எந்தவகை மனிதராக எண்ணுவது?

சொம்புக்குள் தலையை விட்டு, அந்தச் சொம்பு தலையில் மாட்டிக்கொண்டபின் அதிலிருந்து தலையை விடுவித்துக் கொள்ள வகையும் வழியும் தெரியாது தவித்திடும் பூனையைப் போல பல நேரங்களில் ஆளுநர் ரவி, தான் வகிக்கும் பதவியின் பெருமையைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டுக்கு ஆளுநராக வந்தபின் அவர் நடத்திடும் அலப்பறைகளுக்கு அளவே இல்லாமல் போய்க்கொண்டிருப்பதைக் கண்டு கொண்டிருக்கிறோம்!

**ஆளும் அரசியல் கட்சியோடு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களின் உணர்வுக்கும், தமிழ்க் கலாச்சாரத்துக்கும் எதிராக அவர் ஏதாவது ஒரு வகையில் போர் தொடுப்பதைத் தனது இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறார்!**

**‘தமிழ்நாடு’ என்ற பெயருக்கு எதிராக மூக்கை நுழைத்துவிட்டு எல்லாத் திக்கிலிருந்தும் எதிர்பட்ட எதிர்ப்பால் மூக்குடைபட்டார்!**

ஆளுநருக்குத் தரப்பட்ட அதிகாரம், அங்கீகாரம் இவற்றை மீறி செயல்பட நினைத்து, தனது சாதுர்யத்தைக் காட்டுவதாக எண்ணி சட்டப்பேரவையில் அவருக்கு அரசு எழுதி அளித்த உரையில் இடைச்செருகல்கள் நடத்தியும், சிலவற்றை விடுத்தும் பேசி – அத்துமீறி நடந்த போது முதலமைச்சர் தளபதி தந்த எதிர்தாக்குதலை எதிர்கொள்ள இயலாது சட்டமன்றத்தைவிட்டு ஓட்டமும்நடையுமாக வெளியேறினார்.

**தனது பெயருக்குப் பின்னால் ‘ஐ.பி.எஸ்.’ என்ற பட்டத்தைப் பதித்திருப்பவராயிற்றே; விவரங்களைப் புரிந்து கொண்டு ‘தனது ஆட்டம் தமிழ்நாட்டில் செல்லாது’ என முடிவெடுத்து, தனது அதிகார வரம்புக்குள் அடங்கி செயல்படுவார் என எண்ணினோம். ஆனால் அவரது தொடர் நடவடிக்கைகள் அவரை திருந்தும் ஜென்மமாகக் காட்டிடவில்லை.**

‘உச்சநீதிமன்றம் தொடர்ந்து குட்டிடும் குட்டுகளால் கூனிக் குறுகிப் போயிருப்பார்; இனி எல்லை மீறமாட்டார்’ என்ற பலரது நினைப்பினையும் நிராசையாக்கிக் கொண்டிருக்கிறார்!




இப்போது அய்யன் திருவள்ளுவருக்குக் காவி வண்ணம் பூசி, **“பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்....”** எனக் குறள் படைத்த அந்தக் கோமானை, வருணாசிரமத்துக்குள் வளைத்துப் போட முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

ஆரியத்தின் ஆணவம், அகங்காரம், அத்துமீறல் அத்தனையையும் எதிர்கொண்டு; அந்த ஆரியத்தையே அடிபணிய வைத்து ஆட்சிபீடம் ஏறியது திராவிடக் கொள்கைகள். இதனை ஆளுநர் ரவியால் மட்டுமல்ல; அவருக்குத் துணைபோகும் ஆரிய அடிவருடிகளாகத் திகழும் கோடாரிக் காம்புகளாலும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது!

**வருணாசிரமக் கொள்கைகளால் குட்டக்குட்டக் குனிந்து, புழுவாய், புன்மைத் தேரையாய் அடங்கி ஒடுங்கிப் புதைந்து கிடந்த தமிழினத்தை; அதன் தன்மான உணர்வைத் தட்டி எழுப்பிய தந்தை பெரியாரின் பூமி இது!.**

**மூடிக்கிடந்த தமிழ்ச் சமுதாயத்தின் விழிகளைத் திறந்து, அறிவாசான் அண்ணா வார்த்தெடுத்த அடலேறுகளைக் கொண்ட மண் இந்தத் தமிழ் மண்!**

**தந்தை பெரியார் சுடரேற்றித் தந்த சுயமரியாதை தீபத்தை தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சுடர்விடச் செய்ய ஓய்வறியாது உழைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அறிவுச்சுடர் ஏற்றிய அறிவுசார் நிலம் இந்தத் தமிழ் நிலம்!**

இங்கே, ஆளுநர் ரவி மட்டுமல்ல; அவரது எஜமானர்கள் ஆட்டமெல்லாம் வேகாது! மேலும் தெளிவுபெற திராவிட இயக்க வரலாற்றைப் படித்துணர்ந்தால் இங்கே பலரின் நரித்தனங்களின் வாலறுக்கப்பட்ட விவரங்களை ஆளுநர் ரவி போன்றோரால் உணர முடியும்!




சென்னை அண்ணா சதுக்கம் மற்றும் கலைஞர் நினைவிடத்தின் முகப்பு வாயில் கட்டுமானப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (18.01.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மற்றும் பொதுப் பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சேலத்தில் பொங்கல் விழா!

சேலம், ஜன. 19-

சேலம் கிழக்கு மாவட்டம் - ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் தை திருநாளை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் வைத்து கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்புகளை ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன் வழங்கினார்.

இதில் மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள், சண்முகம், சேட்டு, கருணாநிதி, வரதராஜன், ராஜவேல், செல்வராஜ், அரசு, வீராசாமி, சசிகுமார், கிருஷ்ணமூர்த்தி, சிதம்பரம், ராஜேந்திரன், சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; ஒன்றிய அரசின் நிதியை என்ன செய்தீர்கள் என்று ஆளுநர் ரவி கணக்கு கேட்பதாக ஒரு பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளதே?

**போண்டி :** ஆமாய்யா; **தமிழ்நாட்டு ஆளுநர் என்று சம்பளம் வாங்கி சொகுசு அனுபவிக்கும் ரவி, தமிழ்நாட்டுக்கு என்ன செய்தார்? ஒன்றிய அரசிடம் இருந்து எத்தனை கோடி நிதி வாங்கிக் கொடுத்தார்? என்று நாம் கேட்போமா?**

### இளைஞர் அணி மாநில உரிமை மீட்பு மாநாட்டை விளக்கி

# தாம்பரத்தில் பொதுக்கூட்டம்! - டி.ஆர்.பாலு எம்.பி. - ஈரோடு இறைவன் சிறப்புரை!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தாம்பரம், ஜன. 19 -

சேலத்தில் ஜனவரி 21-ல் நடைபெறும் இரண்டாவது இளைஞர் அணி மாநில உரிமை மீட்பு மாநாடு விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ.அன்பரசன், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. , ஈரோடு இறைவன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர். இது குறித்து பகுதிச் செயலாளர் டி.காமராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் இன்று (19-1-2024 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் சனவரி 21 சேலம் மாநகரில் நடைபெறும் மாநில உரிமை மீட்பு இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு விளக்கப் பொதுக் கூட்டம் எனது (டி.காமராஜ்) தலைமையிலும் ஜா. ரவிக்குமார் வரவேற்பில் நடைபெறுகிறது.

இதில் பகுதி நிர்வாகிகள் டி.ஆர்.கோபி, லிங்கேஸ்வரி, பாபு, ஆர்.செல்வகுமார், செ.சுரேஷ், இரா கந்தசாமி, எம்.ரவிக்குமார், மா.கன்னியப்பன், எஸ். சரவணன் ஆகியயோர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழு தலைவருமான டி.ஆர். பாலு, அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ ,மாநில இலக்கிய அணி செயலாளர் கவிஞர் ஈரோடு இறைவன்,ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, பகுதிக் கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், பகுதி கழக செயலாளர் எஸ்.சேகர், பிரமணிஆதிமூலம், வேராசேந்திரன், கி.வேலுமணி, எஸ்.ஜி.கருணாகரன், வீ. கார்த்தி, ச.இராஜேஷ், இரா.இரத்னகுமார், டி. கே.தாமஸ், டி.கே.கோட்டி, கி.முத்துமாறன், வட்டக் கழக செயலாளர் ஜி.ஸ்ரீதர், குமார், எ.பாபு, எஸ்.ஐசக், மு.வினோத், ஆர், சஞ்சீவி, இ.கமலக்கண்ணன், மு.விஜயன், பி.சுரேஷ் மாமன்ற உறுப்பினர்கள் பி.ஜோதிகுமார், பி. புகழேந்தி, ஆர். தாமோதரன், சசிகலா, கார்த்தி, கமலா, சேகர், மதுமிதா, மதன், ஹேமாவதி, சேகர், வி முனுசாமி, எம் சீனிவாச குமார், எல் பேகம், டி ஆர் நரசிம்மன், எம் கலைவாணன், ஆ .லோகேஷ்குமார், ஏ.நசீர், வி ஜி சிவக்குமார், கே. ரமேஷ்பாபு, டிவி கே முருகன், சி இளஞ்செழியன், வா லோகநாதன், கு பிரபாகரன், கழகப் பேச்சாளர்கள் டிவி ஏகாம்பரம், எஸ் சந்திரன், பிரஸ் சுந்தரம், சேமைக்கேல்ராஜ், எஸ் கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாவட்ட, மாநகர,வட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, பொதுமக்கள் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்துகொண்டு பொதுக் கூட்டத்தை சிறப்பித்திட வேண்டுமாய் பகுதிச் செயலாளர் டி.காமராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2-வது மாநாட்டில்

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், ஜன. 19 -

வரலாற்று சிறப்புமிக்க இளைஞர் அணி 2-வது மாநாடு சேலத்தில் வரும் 21 அன்று நடை பெறுகின்றது. இம் மாநாட்டில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங் கேற்பீர் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக மாநில இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகிற 21ஆம் தேதிசேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாடு தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினை மிஞ்சும் வகையில் நடைபெற உள்ளது.

இந்த மாநாடு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலின் வெற்றிக்கு அடித்தளமாக அமையும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப்பான முறையில் திருப்பு முனை மாநாடாக இது அமையும்.

இந்த மாநாடு குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உத



யநிதி ஸ்டாலின் அவர்கள் அன்பு அழைப்பு விடுத்த வேண்டுகோளில்,

"நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி கன்னியாகுமரியில் தொடங்கி வள்ளுவர் - பெரியார் - அண்ணா - கலைஞர் மண்டலம் என தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிவாரியாக 234 தொகுதிகளிலும் கருப்பு-சிவப்பு உடையணிந்த இளைஞரணித் தோழர்களின் இருசக்கர வாகன அணிவகுப்பு நடந்தது.

இதற்கிடையில், நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று அதனை சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம்.

ஆனால், தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது தோழர்களின் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து, மேலும் தொடர்ந்து கையெழுத்துகள் குவிந்த வண்ணம் உள்ளன.

இது தான், போர்க்களத்துக்கு தமது வீரர்களை ஒரு தளபதி தயார்ப்படுத்தும் முறை. அதனை நமது தலைவர் அவர்கள், கச்சிதமாக செய்கிறார்கள்.

இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, இந்திய ஒன்றிய அரசியலின் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிற இந்த மாநாட்டுக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன.

எனதருமை இளைஞரணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத் தயாராவீர்.

நமது உயிருடன் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 1981ஆம் ஆண்டு இதே சேலம் ஆத்தூரில் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய பேருரையில்,

"ஓர் இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்திருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் - அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையும் - பழைய தலைமுறை பட்ட பாட்டினால் அல்லவா இந்தப் பலன் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்து காரிய மாற்றவும் இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவலா கும்" என்று சொன்னார்.

அந்த கலைஞர் அவர்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் அதே சேலம் ஆத்தூரில் நமது மாநாடு அமைய வேண்டும். புதிய ரத்தம் பாய்ச்சவும், இயக்கத்தின் இலட்சியங்களை அவர்கள் மனதில் பதிய வைக்கவும், மூத்தத் தலைவர்களின் வழிகாட்டுதல் படி நடக்கவும் உறுதியேற்கத் தான் நம் இளைஞரணியின் மாநில மாநாடு! உங்கள் ஒவ்வொருவரையும் மாநாட்டுப் பந்தலில் என் கண்கள் தேடும்.

தமிழ்நாட்டை மட்டுமல்ல - ஒட்டு மொத்த இந்தியாவையும் காக்க" என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று, சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் வரும் 21 ஆம் தேதி அன்று காலை 8 மணிக்கு நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப் பினர்கள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், முன்னணியினர், அனைத்து அணி களின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாவட்டத்தில் உள்ள கழக இளைஞரணித் தோழர்கள் அனைவரும் வெண் சீருடையில் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவொற்றியூர் மேற்குப் பகுதியில் சமத்துவப் பொங்கல் விழாவை முன்னிட்டு பகுதிச் செயலாளர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் நல உதவிகளை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் தொகுதி பொறுப்பாளர் சி.தசரதன் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஏழைகளுக்காக அர்ப்பணிப்பு என்று பிரதமர் கூறுவது ஏமாற்று வேலை!

# அதானி - அம்பானிக்காகவே பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியை அர்ப்பணித்துள்ளது!

### 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜன. 19 -

அதானி, அம்பானிக்காகவே பா.ஜ.க., ஒன்றிய ஆட்சியை அர்ப்பணித்திருக்கிறது. ஏழைகளுக்காக அர்ப்பணிப்பு என்று பிரதமர் கூறுவது ஏமாற்று வேலை என்று 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து 18.1.2024 தேதிய 'தீக்கதிர்' தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது; ஒன்றிய பா.ஜ.க. அரசின் கடந்த 10 ஆண்டுகள் ஏழைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது எனப் பிரதமர் பேசி வருகிறார். ஆனால் உண்மை விபரங்கள், இது திட்ட மிட்டுக் கட்டமைக்கப்படும் வாய்ப்பந்தல் பொருளாதாரம் என்பதையே காட்டுகிறது. இந்தியாவில் மூன்றாவது காலாண்டில் புதிய முதலீடு 46 சதவிகிதம் சரிவு ஏற்பட்டிருக்கிறது. எஃகு, சிமெண்ட், போக்குவரத்து சாதன உற்பத்தி 50 சதவிகிதத்திற்கு மேல் வீழ்ச்சியடைந்தி



தீக்கதிர்

2024 ஜனவரி 18 வியாழக்கிழமை

நிழல்தரா வாய்ப்பந்தல்...

ருக்கிறது. ரயில்வே துறை முதலீட்டில் 92 சதவிகிதம் சரிவு ஏற்பட்டிருக்கிறது.

கடந்தாண்டு செப்டம்பர் மாதம் வரை வெளியாகியுள்ள விபரங்களின் படி நேரடி அந்நிய முதலீடு 38 பில்லியன் டாலரிலிருந்து 13 பில்லியன் டாலராகச் சரிவடைந்திருக்கிறது. 2022 - 23 நிதியாண்டில் 4 சதவிகிதமாக இருந்த வேளாண் துறையின் வளர்ச்சி, 2023 - 24 நிதியாண்டில் 1.8 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. இதில் எங்கே இருக்கிறது வளர்ச்சி?

கடந்த 20 ஆண்டுகளை விட நடப்பு நிதியாண்டின் நுகர்வு 4.4 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இதன் தொடர்ச்சி உள்நாட்டுக் கிராக்கியைக் குறைத்து உற்பத்தியை தேக்கமடையச் செய்கிறது. முதலீடுகளின் அளவையும் குறைப்பதற்கு இட்டுச்செல்கிறது.

இதன் எதிரொலியாக மறுபுறம் வேலையின்மை அதிகரிக்கிறது. இது தான் இந்தியப் பொருளாதாரத்தின் உண்மை நிலை. இதனை தலைகீழாக மாற்றிச் சொல்வதால் வளர்ச்சியை உருவாக்க முடியாது. வளர்ச்சி என்ற வதந்தியைத்தான் உருவாக்க முடியும். இதையே மோடி முழு நேரமாக செய்து வருகிறார்.

இதற்கு ஏற்றவாறு நிதி ஆயோக், கடந்த 9 ஆண்டுகளில் 25 கோடிப் பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது. அப்படியென்றால் ஏன் உலக பட்டினி குறியீட்டு பட்டியலில் 125 நாடுகளில் இந்தியா 111 ஆவது இடத்தில் இருக்கிறது?

2014 முதல் 2022 வரையிலான எட்டு ஆண்டுகளில் நுகர்வுச் செலவுக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. நுகர்வு செலவைக் கணக்கிடாமல் எப்படிக் கடந்த 9 ஆண்டுகளில் வறுமையிலிருந்து மீண்டவர்களைக் கணக்கெடுக்க முடிந்தது?

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையைப் பயன்படுத்தி இந்தியா ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு கச்சா எண்ணெய்யை அதிகளவில் இறக்குமதி செய்தது. ஆனால் மக்களுக்கு விலையைக் குறைத்து விற்கவில்லை. மாறாக அம்பானி, அதானி உள்ளிட்ட பா.ஜ.க. கூட்டுக்களவாணி கார்ப்பரேட்கள் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது, ஏன் ? உண்மையில் கடந்த 10 ஆண்டு களாக அதானி, அம்பானிக்காகவே பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியை அர்ப்பணித்திருக்கிறது; பிரதமர் ஏழைகளுக்காக அர்ப்பணித்துள்ளதாக கூறுவது ஏமாற்று வேலை என்பதை நாடறியும். வாய்ப்பந்தல் ஒரு போதும் நிழல் தராது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### தை கிருத்திகையை முன்னிட்டு, திருப்போரூரில்

# முருகனின் அறுபடை வீடுகளைப் போற்றும் விழா!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்.

சென்னை, ஜன.19 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (18-01- 2024) ஆணையர் அலுவலகத்தில் தைகார்த்திகை, தைப்பூசம், மகா சிவராத்திரி விழா, அறுபடை வீடு ஆன்மிகப் பயணம், இராமேஸ்வரம் காசி ஆன்மிகப் பயணம் ஆகியவற்றிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்க் கடவுள் என போற்றப்படும் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளை போற்றும் வகையில் தைகிருத்திகை பெருவிழா செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், கந்தசுவாமி திருக்கோயில் திருமண மண்டபத்தில் 19.01.2024 மாலை முதல் 20.01.2024 இரவு வரை வெகுவிமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இங்கு முருகப்பெருமானின் அறுபடை வீடுகள் அரங்குகளாக அமைக்கப்படுவதோடு தைகிருத்திகை தினமான 20.01.2024 அன்று நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட உள்ளது. மேலும், ஆன்மிக சிறப்பு பட்டிமன்றம், திருக்குற்றால குறவஞ்சி பரத நாட்டிய நாடகம் மற்றும் பக்தி இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. சமயச் சான்றோர்கள் மற்றும் இறையன்பர்கள் பங்கேற்கின்ற இவ்விழா வினை மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும்.

தைப்பூச விழாவினை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் முருகப் பெருமான் திருக்கோயி ல்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகளையும், பக்தர்கள் இலகுவாகவும், விரைவா வும் தரிசனம் மேற்கொள்ளும் வகையில் செய்ய வேண்டிய சிறப்பு ஏற்பாடுகளையும், அனைத்து துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மண்டல இணை ஆணையர்கள் மற்றும் திரு க்கோயில் செயல் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மகா சிவராத்திரி பெருவிழா கடந்தாண்டு வரை 5 திருக்கோயில்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்தாண்டு கூடுதலாக மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருவானைக்காவல், அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில் களையும் சேர்த்து 7 திருக்கோயில்கள் சார்பில் 08-03- 2024 அன்று மகா சிவராத்திரி பெருவிழா



வினை விமரிசையாகவும், ஆன்மிக கலை நிகழ்ச்சி களுடன் சிறப்பாக நடத்திட உரிய ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட திருக்கோயி ல்களின் செயல் அலுவலர்கள் செய்திட வேண்டும்.

அறுபடை வீடு ஆன்மிக பயணத்தில் ஆண்டுக்கு 1,000 மூத்த குடிமக்கள் பங்கேற்க உள்ளனர். இதன் முதற்கட்ட பயணம் வருகின்ற ஜனவரி 28 அன்று தொடங்க உள்ள நிலையில் அப்பயணத்திற்கான ஏற்பாடுகள், பக்தர்களுக்கான தங்குமிட வசதிகள், போக்குவரத்து வசதிகள், சிறப்பு தரிசனம் போன்றவை குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

இந்தாண்டிற்கான இராமேசுவரம் - காசி ஆன்மிக பயணத்தில் 300 பக்தர்கள் 5 கட்டங்களாக அழைத்து செல்லப்பட உள்ளனர். முதற்கட்ட பயணம் பிப்ரவரி 1 ந் தேதி புறப்படும் நிலையில் அதற்கான முன்னேற்பாடு பணிகள், காசியில் பக்தர்கள் தங்குவதற்கும், உணவிற்கும் செய்யப்பட்டுள்ள வசதிகள், பக்தர்களுக்கு உதவியாக செல்லும் அலுவலர் மற்றும் பணியாளர் குழு, மருத்துவக் குழு நியமனம் செய்து பக்தர்களை பாதுகாப்பாக அழைத்து செல்ல உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்து சமய அறநிலையத்துறை மற்றும் திருக்கோயில்கள் சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் சிறப்பான முறையிலும், பக்தர்களுக்கு பயனுள்ள வகையிலும் அமைந்திட துறை அலுவலர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், ந.திருமகள், சி. ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், பொ.ஜெயராமன், கோ.செ. மங்கையர்க்கரசி மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.01.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை–3 பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 64 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செவி மாற்றுத்திறன் மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரம், கொண்டப்பநாய்க்கன்பட்டியில் 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கான புதிய கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே. கமல் கிஷோர், ஆகியோரும், சேலத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ. கார்மேகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஓசூர் மருத்துவமனையை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் பணிக்கு அடிக்கல்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் நாட்டினார்!

**சென்னை,ஜன.19-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஓசூர் மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிக்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக் கல் நாட்டினார்.**

**மேலும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமி யோபதி துறையில் சிகிச்சை உதவியாளர் பணி யிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 59 நபர்க ளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனை கள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக் கினை செயல்படுத்தும் வகையில் ”மக்களைத் தேடி மருத்துவம் சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் ”இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48, சுகாதார நடைபாதை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை யின் 2022–23ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் இல்லாத மாவட்டங் களில் மக்கள் பயன்பெறும் வகையில் உயர்தர மருத்துவ சேவைகளை வழங்கிட புதிய மாவட்ட தலைமை மருத்துவமனை அமைத்தல் மற்றும் மருத் துவமனைகளை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஜெயங்கொண்டான், தாம்பரம், பழனி, திருக்கோவிலூர், கரூர், ஓசூர், மயிலாடுதுறை, வேதாரண்யம், ராசிபுரம், அறந்தாங்கி, பரமக்குடி, கூடலூர், திருத்தணி, வள்ளியூர், திருப்பத்தூர், காங் கேயம், குடியாத்தம், திண்டிவனம் மற்றும் அருப் புக்கோட்டை ஆகிய 19 அரசு மருத்துவமனைகள் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**வலுவான சுகாதார உட்கட்டமைப்பு!**

அந்த அறிவிப்பின்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள அரசு மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயி லாக அடிக்கல் நாட்டினார்.

புதிய தொழிற்சாலைகள் மற்றும் விரிவடைந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறை காரணமாக ஓசூர் மாநகராட்சி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்து வருகிறது. ஆகையால் பெருகிவரும் மக் கள்தொகைக்கேற்ப ஒரு வலுவான சுகாதார உட்கட் டமைப்பை ஏற்படுத்துவது அவசியமான ஒன்றாகும். எனவே, ஓசூரில் உள்ள அரசு மருத்துவமனையை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி, விரிவான சிறப்பு மருத்துவ சேவைகளை வழங்கும் வகையில்,

22,395 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் 419 படுக்கைகள் கொண்ட மாவட்ட தலைமை மருத்துவமனை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது.

இம்மருத்துவமனையில், அதிநவீன வசதிகளு டன் கூடிய புறநோயாளிகள் பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவுகள் மற்றும் உயர் சார்பு பிரிவுகள், அறுவை சிகிச்சை அரங்கு வளாகங்கள், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் நோயாளிகளுக்கான பிரத் யேக அறைகள், ஆண் மற்றும் பெண் உள்நோ யாளி பிரிவுகள், வலி மற்றும் நோய்த்தடுப்பு சிகிச்சை பிரிவுகள், முதியோர்களுக்கான சிறப்பு பிரிவுகள், கட்டண பிரிவுகள் ஆகிய பிரிவுகளும், அவசரகால மற்றும் விபத்து மேலாண்மை சிகிச்சை பிரிவு (TAEI), இரத்த சுத்திகரிப்பு சேவைகள், ART மையம், மத்திய மருந்துக் கடைகள், காசநோய் சிகிச்சைக்கான சேவைகள், மருத்துவக் கழிவு மேலாண்மை மற்றும் நோயாளிகள் பதிவு அறை கள் போன்ற கூடுதல் வசதிகளும் வழங்கப்படும்.

‘108’ அவசரகால ஊர்தி சேவையானது 2008 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

‘108’ அவசர கால சேவையானது அரசு தனியார் பங்களிப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டு, 24x7 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங் கப்படுகிறது. பொதுமக்கள் அவசர கால மருத்துவ தேவைக்கு தொலைபேசி எண்ணான ”108”–ஐ தொடர்பு கொண்டு பயன்பெறுகின்றனர்.

அவசரகால நெருக்கடியின் போது தேவையான மருத்துவ உதவியை இலகுவாகவும், உடனடியாக வும் பொதுமக்கள் அனைவரும் பெற்று பயன்பெ றும் வகையில், தற்போது 1,353 எண்ணிக்கையி லான ‘108’ அவசர கால ஊர்திகள் செயல்பாட்டில் உள்ளன. ‘108’ சேவை மூலம் இதுவரை 1.61 கோடி பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

2023–24ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக் கையில், 108 அவசரகால ஊர்திகளின் சேவையை வலுப்படுத்த 62 புதிய அவசரகால ஊர்திகள், 13 தாய் சேய் நல ஊர்திகள் மற்றும் 98 நவீன வென் டிலேட்டர் கருவிகள் ஆகியவை கொள்முதல் செய் யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ”108 அவசரகால ஊர்திகளின் சேவைகளை மேம்படுத்த, அடிப்படை வசதி கொண்ட 55 புதிய அவசர கால ஊர்திகள், பழங்குடியினர்கள் பயன்பாட்டிற்காக மலைபகுதிக ளில் செல்லத்தக்க வகையில் 7 புதிய நான்கு சக்கர அவசர கால ஊர்திகள், தாய் சேய் நல ஊர்தி (JSSK) திட்டத்தின் கீழ் 13 புதிய ஊர்திகள், என மொத்தம் 14 கோடியே 73 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 75 புதிய ஊர்திகளை பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் விதமாக, முத லமைச்சர் அவர்கள் ஊர்தி ஓட்டுநர்களிடம் அவ்வா கனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

மேலும், மேம்படுத்தப்பட்ட அவசரகால ஊர்திக ளில் பொருத்திடும் வகையில் 6 கோடியே 53 இலட் சம் ரூபாய் மதிப்பிலான 98 நவீன செயற்கை சுவாச கருவிகளை (Transport Ventilator) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் வழங்கி னார்.

**பாராட்டுச் சான்றிதழ்கள்!**

மிக்ஜாம் புயல் மற்றும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பெய்த அதி கனமழையின் போது சிறப்பாக பணியாற்றிய ”108 அவசரகால ஊர்தி பணியாளர்கள் எஸ். மோகன், எஸ். ராஜா, என். அரவிந்த்குமார், கே. சந்தனமாரியப்பன் ஆகியோ ருக்கு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு சான்றிதழ் களை வழங்கி பாராட்டினார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையில் சிகிச்சை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை யின் கீழ் இயங்கும் யோகா மற்றும் இயற்கை மருத் துவ நிலையங்களில் காலியாக உள்ள 59 சிகிச்சை உதவியாளர் பணியிடங்களுக்கு மருத்துவப் பணி யாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக தெரிவு செய் யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத் தால் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றின் நிலையை கண் டறிய அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பரிசோதனை மையங்கள், பால்வினைத் தொற்று சிகிச்சை மையங்கள் மற்றும் கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. இதன் பயனாக தமிழ்நாட்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் குறைந்துள்ளது.

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் 2023 டிசம்பர் மாதம் புதுதில்லியில் நடைபெற்ற அனைத்து திட்ட இயக்குநர்கள் கூட்டத்தில், தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் அனைத்து திட்ட பிரிவுகளிலும் சிறப்பாக செயல்பட்டதற்காக, சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக (Best Performing State) தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்து, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு 2022–23ஆம் ஆண்டிற்கான பாராட்டு சான்றித ழும், கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந் திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக் குநர் / உறுப்பினர் செயலர் டி.என். ஹரிஹரன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஏ. சண்முககனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நாடா ளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், மாவட்ட ஆட் சித் தலைவர் திருமதி ம. சரயு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



2023–24ஆம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் உள்ள சமுதாய சுகாதார நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பச்சிளம் குழந்தை நிலைப்படுத்துதல் பிரிவினை (New Born Stabilization Unit) நேற்று (18.01.2024) திறந்து வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தேசிய நலவாழ்வுக் குழுமத் திட்ட இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் டாக்டர் டி.எஸ்.செல்வவிநாயகம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இந்து சமய அறநிலையத் துறையில்

# செயல் அலுவலர் 64 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை,ஜன.19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.01.2024) தலைமைச் செயலகத் தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை 3 பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 64 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வா கக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களை முறையாக பராமரித்தல், சொத்துகளை பாது காத்தல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளை செயல் அலுவலர்கள் மேற்கொண்டு வருகி றார்கள். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த செயல் அலுவலரின் பணிகளில் தொய்வு ஏற்படாத வண்ணம், காலிப் பணியிடங்கள் அவ்வப்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்பட்டு வருகின் றன. அந்த வகையில், முதலமைச்சர் அவர் கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வா ணையத்தால் செயல் அலுவலர் நிலை - 1 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 22 நபர்களுக்கு கடந்த 21.09.2022 அன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, தற்போது இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப்ப ணியில் செயல் அலுவலர் நிலை3 காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணி யாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப் பட்ட 64 நபர்களுக்கு பணி நியமன ஆணை களை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலை மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 2லட்சம்உயிர்களைக் காப்பாற்றிய ‘இன்னுயிர்காப்போம்திட்டம்!’

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 19-

‘2 லட்சம் உயிர்களை காப் பாற்றியுள்ளது இன்னுயிர் காப் போம் திட்டம்’ என்று “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் பாராட் டியுள்ளது.



தலையங்கம்
தினத்தந்தி
18.1.2024 (வியாழக்கிழமை)
2 லட்சம் உயிர்களை காப்பாற்றிய இன்னுயிர் காப்போம் திட்டம்!

இதுகுறித்து 18.1.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் மிக அதிகமாக சாலை விபத்துகள் நடக்கின்றன. விபத்துகளால் உயிரிழப்பு களும் அதிகமாக ஏற்படுகின்றன. விபத் தில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க முதல் ஒரு மணி நேரம் ‘தங்க நேரம்’ என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், ஒரு மணி நேரத்துக்குள் மருத்து வமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்துவிட்டால், உயி ரைக் காப்பாற்றிவிடலாம். இதற் காக நெடுஞ்சாலைகளில் 108 ஆம்புலன்சுகள் ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலையோரம் அரசு மருத்து வமனைகள் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், தனி யார் மருத்துவமனைகள் நிறைய இருக்கும்.

விபத்து நடந்தவுடன் பாதிக் கப்பட்டவர்களை மருத்துவம னைக்கு கொண்டு செல்பவர்க ளுக்கு தமிழக அரசு ரூ.5 ஆயிரமும், மத்திய அரசாங்கம் ரூ.5 ஆயிரமும் ஊக்கத்தொகை யாக வழங்குகிறது. விபத்தில் சிக் கும் எல்லோருமே வசதி படைத் தவர்களாக இருக்கமுடியாது. அரசு மருத்துவமனையை தேடி அழைத்து செல்வதற்குள் சில மணிநேரம் காலம் கடந்துவிடுகி றது.

இத்தகைய சூழ்நிலையில், கடந்த 18.11.2021 அன்று முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் சாலை பாதுகாப்பு குறித்தும், சாலை விபத்துகளை குறைப்பது குறித்தும், சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப் புகளை தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு நடத்தினார்.

அப்போது சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்துக்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள் ளும் வகையில், ‘இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48’ என்ற திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டார்.

அந்த ஆணையில், முதல்-அமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உள்ளவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்த வர், வேற்று நாட்டவர் என அனைவருக்கும் தமிழக எல் லைக்குள் ஏற்படும் சாலை விபத் துகளில் காயமடையும் நேரத் தில், முதல் 48 மணி நேர சிகிச்சைக்காக ரூ.1லட்சம் அரசே வழங்கும் என்று கூறப்பட்டு ள் ளது. ஆணை பிறப்பித்த ‘ஒரு மாதத்துக்குள், அதாவது 2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ந்தேதி மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில், இந்த ‘இன் னுயிர் காப்போம் நம்மைக்காக் கும் 48’ திட்டத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்தார்.

இந்த திட்டத்தின்படி, தமிழ் நாட்டில் உள்ள 237 தனியார் மருத்துவமனைகள், 455 அரசு மருத்துவமனைகள் என 692 மருத்துவமனைகளில், சாலை விபத்துகளில் சிக்கியவர் களுக்கு முதல் 48 மணி நேரம் சிகிச்சை அளிக்க அரசு சார்பில் ரூ.1லட்சம் தரப்படுகிறது. இது ஒரு மகத்தான திட்டம். இத்திட்டம் அமலுக்கு வந் தபிறகு, ஏற்பட்ட முதல் விபத்தில் சிக்கியவர் ஆதிபராசக்தி மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்திலும், 50வது பயனா ளியை சித்தல பாக்கத்திலும் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் சந் தித்து உடல் நலம் விசாரித்தார்.

விபத்தில் சிக்கிய 2 லட்சமா வது பயனாளியும், 2 லட்சத்து ஒன்றாவது பயனாளியும் சென்னை ரேலா மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டு இருந்தனர். அவர்களை அமைச் சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார். ரேலா மருத்துவ மனை ஒரு பெரிய தனியார் மருத் துவமனை. அந்த மருத்துவம னையிலும் சிகிச்சை பெற இந்த திட்டம் உதவுகிறது.

2 ஆண்டுகளில் 2,09,078 உயிர்களைக் காப்பாற்றிய இந்த திட்டம் ஒரு மகத்தான கருணை திட்டம். எவ்வளவு உதவிகள் செய்தாலும் ஒரு உயிரைக் காப் பாற்றுவதற்கு இணை எதுவும் கிடையாதுஎன்ற வகையில், இது ஒரு ஈடுஇணையற்ற திட்டம்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஈகிள் பிரஸ் நிறுவனர் பிரதாப் சிங் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!



**சென்னை, ஜன. 19-**

**ஈகிள் பிரஸ் நிறுவனர் பிரதாப்சிங் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித் துள்ளார்.**

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

ஈகிள் பிரஸ் நிறுவனர் பிரதாப் சிங் அவர் கள் மறைந்தார் என்ற செய்தி கேட்டு வருந்தி னேன். தலைவர் கலைஞரோடும் எங்கள் குடும்பத்தோடும் நட்பு பாராட்டிய அவரது இழப்பு வேதனை தருகிறது.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தமிழ் ஆளுமைகளின் நூல்களை வெளியிட்டுப் பூம்புகார் பதிப்பகத்தைத் தமிழ்க் கருவூலமாக நடத்தியவர் பிரதாப் சிங் அவர்கள்.


அவரது பிரிவால் வாடும், அவரது குடும்பத்தினர், உறவினர் கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


அவரது மகனும், எனது இனிய நண்பரு மான ராஜா சுந்தர்சிங் அவர்களுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் ஜனவரி 21ஆம் தேதி நடைபெறுவதையொட்டி, அம்மாநாட்டின் நோக்கங்களைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை சென்னை அண்ணா சாலை சிம்சன் சந்திப்பு அருகேயுள்ள பெரியார் சிலை அருகே தொடங்கி வைத்து, அண்ணா சிலை வரை அச்சுடர் ஓட்டத்தில் பங்கேற்றார். மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த 500 இளைஞர்களுடன் சென்று, கழக இரு வண்ணக் கொடிகள், பதாகைகளைக் கைகளில் ஏந்தியும் மேள தாளங்களோடும் மாநாட்டுச் சுடரை ஏந்தி வந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார்.


கேலோ இந்தியா உதிக்கிறது! வெற்றியில் தமிழகம் ஒளிர்கிறது!!
கலைஞர் 100
1924 - 2023
இந்திய விளையாட்டுத்துறையின்
தலைநகரமான தமிழ்நாட்டின் சென்னையில்
கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் - 2023
19.01.2024 மாலை, 6 மணி / நேரு வெளி விளையாட்டு மைதானம், சென்னை.
தொடங்கி வைத்திட வருகை தரும்
மாண்புமிகு இந்திய பிரதமர்
திரு. நரேந்திர மோடி அவர்களையும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
அன்புடன் வரவேற்கும்
பி.கே.சேகர்பாபு
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர் - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.
ARASU ARTS



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், பாங்க் ஆப் பரோடா வங்கியின் பொது மேலாளர் மற்றும் மண்டல தலைவர் சரவண குமார், துணை பொது மேலாளர்கள் ராமானுஜ் சர்மா, நிர்மல் குமார் பட்டேல், சுரேஷ் கஜேந்திரன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் திருமதி.அ.வெண்ணிலா எழுதிய ”நீரதிகாரம் புத்தகத்தை வெளியிட்டார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, புத்தகத்தின் ஆசிரியர் திருமதி அ. வெண்ணிலா மற்றும் அவரது குடும்பத்தினர், எழுத்தாளர்கள் ஏ.எஸ். பன்னீர்செல்வம், இமயம், விகடன் குழுமத்தின் பொது மேலாளர் அப்பாஸ் அலி ஆகியோர் உள்ளனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ”108 அவசர கால ஊர்திகளின் சேவைகளை மேம்படுத்தும் வகையில் 14 கோடியே 73 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 75 புதிய ஊர்திகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் விதமாக, ஓட்டுநர்களிடம் அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் / உறுப்பினர் செயலர் டி.என். ஹரிஹரன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஏ. சண்முககனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் சிகிச்சை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எம். கோவிந்த ராவ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும் இயக்கங்களின் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது. ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 55 வகையான முன்னெடுப்புகளின் செயல்பாடுகள் குறித்தும், ஆசிரியர் சங்கங்களின் குறைதீர் கூட்டங்களை மாவட்ட அளவில் நடத்துவது குறித்தும், அடுத்த ஆண்டிற்கான விலையில்லா பொருட்களைக் குறித்த நேரத்தில் விநியோகம் செய்வது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் குமரகுருபரன் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் அறிவொளி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (18.1.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சந்தித்து, ஒன்றிய அரசின் ”ஸ்டார்ட் அப் இந்தியா வெளியிட்ட 2022 ஆம் ஆண்டிற்கான தரவரிசைப்பட்டியலில் சிறந்த புத்தொழில் சூழமைவினை (Startup Ecosystem) கட்டமைக்கும் மாநிலங்களில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட முதல் தர வரிசை பிரிவிற்கான ”Best Performer சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்க இயக்குநர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.







தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சென்னை சர்வதேச புத்தகக் கண்காட்சி 2024' இன் 2வது பதிப்பின் பாராட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றார். இந்த மூன்று நாள் நிகழ்வின் போது 40 நாடுகளைச் சேர்ந்த வெளியீட்டாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் தங்கள் நுண்ணறிவைப் பகிர்ந்து கொண்டனர். தமிழ் இந்தோ–ஐரோப்பிய ஒப்பீட்டு அகராதியை வெளியிட்டு, திராவிட முன்மாதிரி அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் எப்படி இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பண்பாட்டை ஊக்குவித்து வருகின்றனர் என்பதை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி பங்கேற்றனர்.



தி.மு.கழகத்தின் தலைமை கழகப் பேச்சாளர்கள் 350 பேருடன் கலந்துரையாடி அவர்களுக்கு பொங்கல் பரிசுகளை கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் திருச்சி சிவா எம்.பி. உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்றனர். நாட்டுக்காக வாளேந்திய வீரர்களைப் போல தி.மு.கழகத்துக்காக சொல்லேந்திய வீரர்கள் நம் கழக பேச்சாளர்கள். கடுமையான சோதனைகளையும், நெருக்கடிகளையும் சந்தித்தப் பிறகும் கழகம் வலுவோடு திகழத் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் நம் கழக பேச்சாளர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் முக்கியக் காரணம். மாறிவரும் நவீன உலகில் நமது பிரச்சாரங்களும் உரைகளும் எப்படி அமைய வேண்டும் எனக் கூறினார். ஆயிரமாயிரம் மேடைகள் கண்ட மூத்த பேச்சாளர்களும் வளர்ந்து வருகின்ற இளம் பேச்சாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### ஆர்.கே.நகரில் – ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் சமத்துவப் பொங்கல் விழா!

## 3,500 நபர்களுக்கு நல உதவிகள்: ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்!

### தா.இளையஅருணா – இரா.லட்சுமணன் – எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலை!

*சென்னை, ஜன. 19-*

*ஆர்.கே.நகரில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர் ஏற்பாட்டில் 3,500 நபர்களுக்கு 5 கிலோ அரிசி, பொங்கல் பொருட்கள், சர்க்கரைப் பொங்கல், மஞ்சள் குருத்து, செங்கரும்பு, போர்வை உள்ளிட்ட தொகுப்பை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்.*

*சென்னை வடக்கு மவாட்டச் செயலாளர் தா. இளைய அருணா, பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மற்றும் குமரி நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இதில் 200 பெண்கள் சமத்துவப் பொங்கல் வைத்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.*

*இதில் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யூ.கணேசன், இரா.பொன்இளவரசன், இ.ரவிக்குமார், லயோலா மதன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, ஏ.டி.மணி, மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், டி.வெங்கடேசன், கோவிந்தராஜ், எம்.லோகநாதன், திராவிட செல்வி, பி.சீனிவாசன், மாமன்ற உறுப்பினர்கள் தேவி கதிரேசன், பவித்ரா சுரேஷ்குமார், மணிமேகலை ஏழுமலை, ரேணுகா சாவித்ரி செல்வம், விமலா மற்றும் வெ.அ.சத்திய நாராயணன், சி.மணி கண்டன், புத்தன், கதிரேசன், த.வா.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், பா.குமார், எஸ்.தமிழ்ச்செல்வன், எஸ்.சி.சுந்தர், சி.தேவன், சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன்,*

*மாவட்டப் பிரதிநிதிகள் எம்.எம்.சாமி, வி.முத்து, பி.கே.மூர்த்தி, ஜெ.சுரேஷ் பாபு, பி.அன்பழகன், ஆர்.ராஜன், கே.மோகன், சா.திருப்பதி சாமி, டி.ஆர்.தணிகாசலம், எம்.ரூபசங்கர், எஸ்.சொக்கலிங்கம், பா.வேதாசலம், மீஞ்சூர் ஜி.முருகன், ஜி.ராஜன், கென்னடி, டி.சங்கர், என்.ஜானகிராமன் உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*வட்டச் செயலாளர் எம்.நாகராஜ் நன்றி கூறினார்.*

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## மாதவரத்தில் திருவள்ளுவர் தின விழா 300 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

### கே. கருணாகரன், எம். என்.அஜய் தென்னவன், சி. பாலாஜி, சி.மூர்த்தி, எஸ். சிவக்குமார் பங்கேற்பு!

*சென்னை,ஜன.19-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், திருவள்ளுவர் தினமும் பொங்கல் விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 300 பேருக்கு அரிசி பொங்கல் பை, கரும்பு, காலண்டர் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.*

*17 வது வட்டம் செட்டிமேடு பகுதியில், திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டும், மாட்டுப் பொங்கலை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மழைக்காலங்களில் தண்ணீரில் நீந்தி பொதுமக்களுக்கு உணவு கொடுக்க வண்டி இழுத்த மாடுகளை போற்றும் வகையில், செட்டிமேடு கழக முன்னோடி திரு கோபால் கண்ணகி என்பவருக்கு சொந்தமான காளை மாடுகளின் கொம்புகளுக்கு கருப்பு சிவப்பு வர்ணம் பூசப்பட்டு, பலூன்கள் திருஷ்டி கயிறு கட்டப்பட்டு பொங்கல் வைத்து, பொங்கலோ பொங்கல் என்று மகளிர் புடை சூழ, மாட்டுப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.*

*மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம், நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாட்டு வண்டியின் மீது பொதுமக்கள் ஏறி அமர்ந்து உற்சாகமாக மாட்டுப்பொங்கலை கொண்டாடினார்கள்.*

*திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு திருவள்ளுவரின் திருவுருவப்படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம், நாராயணன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.*

*17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், செட்டிமேடு பகுதியை சார்ந்த 300க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு ஐந்து கிலோ அரிசி, கரும்பு காலண்டர், மற்றும் காலை உணவு ஆகியவை வழங்கப்பட்டன.*

*வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, எஸ். சிவக்குமார், கே. சண்முக பிரியன், டி. வினோத், கே. ராஜ்குமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம் .என் .அஜய் தென்னவன், தீயம்பாக்கம் ஜான்சன், பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*நிகழ்ச்சியில் செட்டிமேடு பகுதி நிர்வாகிகள் எம். கோபால்,டி. திவாகர், ரகு, ரவி, தாஸ், சேகர், காசி ,விஜய் ,விக்கி, நாகலிங்கம், யுவராஜ் பொன்ராஜ், சாந்தகுமார் , மைக்கேல், செந்தில், கார்த்திக்உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.*

### சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க இளைஞர் அணி 2- வது மாநில மாநாடு

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக இளைஞர் அணியினர் தங்குவதற்கான இடங்கள் ஏற்பாடு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வருகிற 21.1.2024 ஞாயிறு அன்று நடைபெற உள்ள தி.மு.க. கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் பங்கேற்பதற்காக,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து வருகை தரும் கழக இளைஞர் அணியினர், மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சேலம் மாவட்டம், தலைவாசல், ஸ்ரீ கைலாஷ் மகளிர் கல்லூரியில் ஜனவரி 21-அன்று காலை குளிப்பதற்கும் -சிற்றுண்டி அருந்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கீழ்காணும் விவரப்படி கழக இளைஞர் அணியினர் தங்கிடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

| வ. எண். | கல்லூரி திருமண மண்டபம் | தங்க வேண்டிய ஒன்றிய – நகர – பேரூர் – பகுதி |
|---|---|---|
| 1 | ஸ்ரீ கைலாஷ் மகளிர் கல்லூரி, தலைவாசல், சேலம் மாவட்டம். மாவட்ட கழகம் ஏற்பாடு. | ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக இளைஞர் அணியினர் |
| 2 | வசந்தம் திருமண மண்டபம், சேஷன்சாவடி, ஓமலூர், சேலம் மாவட்டம். | திருப்பெரும்புதூர் வடக்கு-தெற்கு ஒன்றியம் - பேரூர் |
| 3 | கோல்டன் திருமண மண்டபம், கொத்தான்பாடி, ஆத்தூர் வட்டம். | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் |
| 4 | அண்ணா தோட்டம், நாவலூர், தலைவாசல். | பம்மல் வடக்கு பகுதி |
| 5 | வாசவி மகால், வெள்ளாள குண்டம், சேலம் மாவட்டம், | பம்மல் தெற்கு பகுதி |
| 6 | வீரமாத்தியம்மன் சமுதாய கூடம் மேட்டுப்பட்டிதாதனூர் அயோத்தியாபட்டினம் - அரூர் மெயின் ரோடு. சேலம் மாவட்டம். | செம்பாக்கம் தெற்கு பகுதி |
| 7 | செங்குந்தர் மினி மண்டபம், சின்னசேலம். | மாங்காடு நகரம் |

எனவே, மேற்கண்ட ஒன்றிய - நகர - பகுதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடங்கள் தவிர, மாவட்டத்தில் உள்ள மற்ற ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக இளைஞர் அணியினர் மாவட்ட கழகம் ஏற்பாடு செய்துள்ள கல்லூரியில் குளித்துவிட்டு காலை சிற்றுண்டி அருந்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



இளைஞர் அணி மாநாடு தொடர் ஜோதி ஓட்டம் சென்னையில் தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் ஜி.எஸ்.டி. ரோடு, ரயில் நிலையம் அருகில் சேலத்தில் ஜனவரி 21 ஆம் தேதி நடைபெறவுள்ள தி.மு.கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை வழியனுப்பி வைத்தார். உடன் பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், துணை அமைப்பாளர்கள், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### ஜல்லிக்கட்டு, கபடி, கயிறு இழுத்தல் உள்ளிட்ட

## பாரம்பரிய விளையாட்டுகளுடன் களை கட்டிய பொங்கல் விழா!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 19 –

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு, கபடி, கயிறு இழுத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளுடன் பொங்கல் விழாகளை கட்டியது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



தினகரன்

ஜனவரி 18, 2024 வியாழக்கிழமை

ஏற்றமிகு ஏறு தழுவுதல்

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுகளுள் மிகவும் முக்கியமானது ஜல்லிக்கட்டு. ஏறு தழுவுதல் என்று அழைக்கப்படும் ஜல்லிக்கட்டானது, ஆண்டுதோறும் ஜனவரி முதல் மே மாதம் வரை நடத்தப்படும். தடை விதிப்புக்கு பின் நீதிமன்ற வழிமுறைகளை பின்பற்றி, ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டு கடந்த 6ம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் தச்சன்குறிச்சியில் நடந்தது. தமிழர் திருநாளாம் பொங்கல் விழா வையொட்டி, மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து 3 நாட்கள் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. பொங்கலன்று (ஜன. 15)

இதுகுறித்து 18.1.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுகளுள் மிகவும் முக்கியமானது ஜல்லிக்கட்டு. ஏறு தழுவுதல் என்று அழைக்கப்படும் ஜல்லிக்கட்டானது, ஆண்டுதோறும் ஜனவரி முதல் மே மாதம் வரை நடத்தப்படும். தடை விதிப்புக்கு பின் நீதிமன்ற வழிமுறைகளை பின்பற்றி, ஜல்லிக்கட்டுபோட்டிகள்தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டு கடந்த 6ம் தேதி புதுக்கோட்டை மாவட்டம், தச்சன்குறிச்சியில் நடந்தது. தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவையொட்டி, மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து 3 நாட்கள் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. பொங்கலன்று (ஜன. 15) அவனியாபுரம், நேற்று முன்தினம்மாட்டுப்பொங்கலன்று (ஜன. 16) பாலமேடு, நேற்று அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் கோலாகலமாக நடந்தேறின.

தென்மாவட்டங்களை பொறுத்தவரை இந்த 3 நாட்களும் கொண்டாட்டமானவை. வாடிவாசலில் இருந்து திமிலை காட்டி களமிறங்கும் காளையை, தில்லாக பாய்ந்து திமிலை பிடித்து இறுக்கியபடி, வீரத் திமிர் காட்டும் மாடுபிடி வீரரை காண்பதே மிகவும் பரவசமான நிகழ்வு. பொங்கலன்று 817 காளைகள், 435 வீரர்களு டன், மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு மாவட்ட நிர்வாகத்தின் மேற்பார்வையில் நடத்தப்பட்டது. தொடர்ந்து கிராம கமிட்டி சார்பில் நடந்த பாலமேடு ஜல்லிக்கட்டில் 840 காளைகள் களமாடின. 500 வீரர்கள் கள மிறங்கினர். நேற்று நடந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இங்கு 800க்கும் மேற்பட்ட காளைகள் களமிறக்கப்பட்டன. தொடர்ந்து 3 நாட்களும் ஜல்லிக்கட்டு போட்டிகள் எந்தவித உயிர் சேதமுமின்றி சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. திருச்சி அருகே பெரிய சூரியூர் ஜல்லிக்கட்டும் நல்ல முறையில் நடந்துள்ளது. இதற்கு தமிழக அரசின் முன்னேற்பாடுகளே முக்கிய காரணமாகும். ஜல்லிக்கட்டை அடுத்தக்கட்டத்துக்கு கொண்டு செல்லும் வகையில் மதுரை அருகே கீழக்கரையில் சுமார் ரூ.61 கோடி செலவில் பிரமாண்டமாக கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. 5 ஆயிரம் பேர் வரை அமர்ந்து ஜல்லிக்கட்டு போட்டிகளை பார்வையிடும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் குடும்பத்துடன் ஜல்லிக்கட்டை ரசித்து மகிழலாம். வரும் ஜன. 24ல் இந்த அரங்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். ஐ.பி.எல். போட்டிகளை போல ஜல்லிக்கட்டு லீக் போட்டிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஏற்கனவே, 5 மாதங்கள் மட்டுமே நடைபெறும் ஜல்லிக்கட்டை ஆண்டு முழுவதும் நடத்த வேண்டுமென்ற கோரிக்கை, காளை உரிமையாளர்கள், வீரர்கள் தரப்பில் எழுப்பப்பட்டது. இதனை மனதில் கொண்டு புதிய அரங்கத்தில் ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டு நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன், கிரிக்கெட் மைதான கேலரி போல அமைக்கப்பட்ட இந்த அரங்கமானது ஜல்லிக்கட்டை வேறொரு தளத்திற்கு கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை. ஜல்லிக்கட்டுக்கு சர்வதேச அளவில் புகழ் சேர்க்கும் முயற்சியாக, கடல் கடந்து இலங்கையில் இம்மாத முதல் வாரத்தில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது. தொடர்ந்து நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜல்லிக்கட்டு மட்டுமா...? உறியடித்தல், கபடி, கயிறு இழுத்தல், வழுக்கு மரம் ஏறுதல் என எண்ணற்ற பாரம்பரிய விளையாட்டு போட்டிகளுடன் தமிழ்நாட்டில் பொங்கல் விழா வெகு சிறப்பாக, சர்க்கரை பொங்கல் போல இனிமையாக கடந்து சென்றுள்ளது. நாகரிக பாதையில் வாழ்க்கை சென்றாலும், பாரம்பரியம் போற்றும் விழாக்களையும் மறவாமல் கொண்டாடி மகிழ்வோம்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க , கழக அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா வழிகாட்டுதலின்படி சிங்கப்பூரில் NRTIA சார்பில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டப்பட்டது. அயலக அணி பொறுப்பாளர் நரசிம்மன் நரேஷ், அவைத்தலைவர் அஜ்மீர் அலி, பொருளாளர் செல்வபூபதி, ஆலோசகர் ஆரிஃப், செயல்பாட்டாளார்கள் அமுல்ராஜ், வாசுதேவன், பரசுராமன் செல்வம், வேலு பாவடைசாமி , விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. முத்துராமலிங்கம்
### சனவரி 19 (2019)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் – மாவட்ட கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னையில் நேற்று (18.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 44வது FIDE செஸ் ஒலிம்பியாட்டின் இலட்சினையான "தம்பி" வெண்கல சிலையை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க முகப்பில் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத் தலைமை இயக்குனர் சந்தீப் பிரதான், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 4 மாவட்ட சிறுவணிகர்களுக்கு

# முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்!

## ரூ.96.30 லட்சம் வழங்கப்பட்டுள்ளது! அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

*சென்னை, ஜன. 19 -*

தமிழ்நாட்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய "மிக்ஜாம்" புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, "மிக்ஜாம்" புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சிறு வணிகர்களின் தொழில் பயன்பாட்டிற்கான இயந்திரங்களை பழுதுபார்க்கவும் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க, அரசு ஆணை (நிலை) எண் 5 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிசி1)த் துறை, நாள் 05.01.2024 வெளியிடப்பட்டு "முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" எனும் புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமும் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் 4 % வட்டியில் அதிகபட்ச கடன் தொகை ரூ.10,000/ வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இக்கடனை 50 வாரங்களில் வாரந்தோறும் ரூ.200/ என்ற அடிப்படையில் ஒரு வருட காலத்திற்குள் 4% வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் அல்லது மாதந்தோறும் ரூ.1000/ வீதம் உரிய வட்டியுடன் திருப்பி செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டது.



அதன்படி, சிறப்பு முகாம்கள் 05.01.2024 முதல் தொடர்ந்து, சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளான தியாகராய நகர் ரோட்டில் செயல்பட்டு வரும் பாண்டிபஜார் கிளை, திருவல்லிக்கேணி, சிங்கராசாரி தெருவில் செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி கிளை, அசோக் நகர், 4 வது அவென்யூவில் செயல்பட்டு வரும் அசோக் நகர் கிளை, அண்ணா நகர், முதல் மெயின்ரோட்டில் செயல்பட்டு வரும் அண்ணா நகர் கிழக்கு கிளை, ஆதம்பாக்கம் செக்ரடேரியட் காலனியில் செயல்பட்டு வரும் ஆதம்பாக்கம் கிளை, பெரியார் நகர், கார்த்திகேயன் காலனியில் செயல்பட்டு வரும், பெரியார் நகர் கிளை, பிராட்வே, பிரகாசம் சாலையில் செயல்பட்டு வரும் மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் என 7 இடங்களில் நடைபெற்று வருகிறது.

அதேபோல, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளான திருப்பெரும்புதூர் காந்திரோட்டில் செயல்பட்டு வரும் திருப்பெரும்புதூர் கிளை, குன்றத்தூர், ச டை யா ண் டீ ஸ் வ ர ர் கோயில் தெருவில் செயல்பட்டு வரும் குன்றத்தூர் கிளை, செங்கல்பட்டு, ஜீ. எஸ்.டி. சாலையில் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு கிளை, திருப்போரூர் பழைய மாமல்லபுரம் சாலையில் செயல்பட்டு வரும் திருப்போரூர் கிளை, திருவள்ளூர், ஜெயா நகரில் செயல்பட்டு வரும் திருவள்ளூர் கிளை, கடம்பத்தூர் கடை வீதியில் செயல்பட்டு வரும் கடம்பத்தூர் கிளை, பூவிருந்தமல்லி நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் பூவிருந்தமல்லி கிளை, செங்குன்றம் பஜனை கோயில் தெருவில் செயல்பட்டு வரும் செங்குன்றம் கிளை, திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் மீஞ்சூர் கிளை, பொன்னேரி புதிய தேரடி சாலையில் செயல்பட்டு வரும் பொன்னேரி கிளை, கும்மிடிப்பூண்டி, காட்டுக் கொல்லைத் தெருவில் செயல்பட்டு வரும் கும்மிடிப்பூண்டி கிளை, ஊத்துக்கோட்டை பஜார் தெருவில் செயல்பட்டு வரும் ஊத்துக்கோட்டை கிளை என 12 இடங்களில் நடைபெற்று வருகிறது.

இதன் மூலம் நாளது தேதி (18.01.2024) வரை மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள், தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த அட்டை உடைய தெருவியாபாரிகள், சிறு வணிகர்கள், வணிக உபயோகத்திற்காக மின் இணைப்பு பெற்ற சிறு கடை வியாபாரிகள், தெருவோரங்களில் வியாபாரம் செய்யும் பூ வியாபாரிகள், காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்பவர்கள், சாலையோர உணவகங்கள் நடத்துபவர்கள், கைவினைஞர்கள், மீனவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் (புயலால் பழுதடைந்த ஆட்டோவினை சீரமைக்க), அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதையில் கடை வைத்திருப்பவர்கள் ஆகிய சிறு வணிகர்கள்/சிறு, குறு தொழில் முனைவோர்கள் என மொத்தம் 1771 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இதில் 964 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.96.30இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

மேலும், தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த சிறப்பு கடன் முகாம்களில், சிறுவணிகர்கள் வங்கிக் கிளைகளை நேரில் அணுகியோ அல்லது உரிய ஆவணங்கள் மற்றும் விவரங்களை கூட்டுறவுத் துறையின் வலைதளத்தில் உள்ள இணையவழி விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தோ பயனடையுமாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

### சேலம் மாநகரில் 21-1-2024 அன்று நடைபெற உள்ள

# இளைஞர் அணி மாநாட்டிற்காக எழுதப்பட்ட கொள்கைப் பாடல்!

பாடல்; **கவிஞர் இரவிபாரதி !**

பாடியவர் ; **பிரபாகர்** - இசை ; **ஆர்.சுந்தரகாந்தி !**

**பல்லவி**

அழைக்கிறார்... அழைக்கிறார்.... உதயநிதி
ஓடிஓடி உழைக்கிறார் இளையதளபதி - நம்
சேனைகள் அணிவகுத்து திரளட்டும்...
சேலம் மாநகரே திணறட்டும்...! இது
இளைஞர் அணி நடத்தும் மாநாடு...
இளைஞர் உலகமே ஒன்று கூடு...
திமுக... இளைஞர் உலகமே ஒன்றுகூடு

**சரணம் 1**

மாநில உரிமையை மீட்டெடுக்க
மாநாட்டில் சபதம் ஏற்றிடுவோம்...
உயிர்க் கொல்லி நீட்தேர்வை ஒழித்திடுவோம் - மாணவர்க்கு
ஒளிமயமான எதிர்காலம் உருவாக்கிடுவோம்!
வேற்றுமைப் படுத்தும் சனாதனம்
வேண்டவே வேண்டாம் நமக்கு
சமூக நீதியை நிலைநாட்டி
சமத்துவம் காண்பதே நம் இலக்கு
வேர்வை சிந்தவே உழைத்திடுவோம் - மாற்றார்
வியக்கும் வகையில் அணிவகுத்திடுவோம்
நேர்மையுடன் மக்கள்பணி ஆற்றிடுவோம்..
நிச்சயம் வெற்றி கொடியை ஏற்றிடுவோம்...!

**சரணம் 2**

தளபதி ஆள்கின்ற தமிழ்நாடு - இன்று
தலை நிமிர்ந்து நிற்குது சிறப்போடு - முதல்வர்
சாதனைகள் அனைத்தும் சரித்திரம்
தவிடு பொடியானது தரித்திரம்...!
இந்தியா கூட்டணி வெற்றிபெற்று - வந்த
இன்னல்கள் அனைத்தும் விடைபெற்று - புது
இந்தியா இங்கே உருவாகணும் - நம்
இளைஞர்கள் உழைப்பு எருவாகணும்...
வரலாறு போற்றும் மாநாடென்று
வருங்காலம் பெருமையுடன் சொல்லணும்
வருகின்ற தேர்தல்கள் அனைத்திலும் - வெற்றி
வாகை சூடியே நாம் வெல்லணும்...!

### நாகை மாவட்டம் - தலைஞாயிறு ஒன்றியச் செயலாளர்

# மகா.குமார் மாமியார் என்.சந்திரா மறைவு!

## என்.கௌதமன் - கழகத்தினர் அஞ்சலி!

*நாகை. ஜன. 19 -*

நாகை மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியச் செயலாளர் மகா.குமார் மாமியார் என்.சந்திரா இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த என்.சந்திராவிற்கு கணவர் என்.நாடிமுத்து, மகன் என்.தங்கபாலு, மகள் தங்க நிலா மகாகுமார் ஆகியோர் உள்ளனர்.

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் கருப்பம்புலம் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப் பட்டிருந்த அம்மையார் என்.சந்திராவின் உடலுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.



பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் ஒன்றிய செயலாளர் கொத்தியாபாக்கம் டி.தேசிங்கு ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு வருகின்ற 21 ஆம் தேதி நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கி மேலும் மாநாட்டில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு சீருடை வழங்கினார். அருகில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நகரச் செயலாளர்கள் என்.இ.கே.மூர்த்தி, ஜி.நாராயண பிரசாத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், இ.கந்தபாபு, சி.அண்ணாகுமார் உள்பட பலர் உள்ளனர்



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் 21-ஆம் தேதி ஞாயிறு அன்று நடைபெற உள்ள நிலையில், மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டம், சென்னையிலிருந்து 18.01.2024 (வியாழக்கிழமை) காலை தொடங்கியது. சென்னை அண்ணா சாலை சிம்சன் சந்திப்பில் உள்ள பெரியார் சிலையிலிருந்து மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை, மாண்புமிகு அமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் காலை 7.00 மணி அளவில் தொடங்கி வைத்தார்.

மாநாட்டுச் சுடர் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி வழியாக 316 கிலோ மீட்டர் தூரம் பயணித்து சேலம் மாநாட்டுத் திடலைச் சென்றடைகிறது. இந்த மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டத்தில் அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | இடம் / தொகுதி / மாவட்டம் | பங்கேற்போர் |
|---|---|---|---|
| 19.01.2024 | 12:15 AM | மதுராந்தகம் (பைபாஸ்), மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு. | |
| 19.01.2024 | 3:15 AM | மேல்மருவத்தூர், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு. | **க.சுந்தர்** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **வழக்கறிஞர் அ.யுவராஜ்** மாவட்ட அமைப்பாளர் காஞ்சிபுரம் தெற்கு. |
| 19.01.2024 | 4:15 AM | அச்சரப்பாக்கம், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு. | |
| 19.01.2024 | 8:30 AM | திண்டிவனம் (பைபாஸ்), திண்டிவனம், விழுப்புரம் வடக்கு. | **மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான்** மாவட்டச் செயலாளர், **க.ஆனந்த்** மாவட்ட அமைப்பாளர், விழுப்புரம் வடக்கு. |
| 19.01.2024 | 9:30 AM | மயிலம், மயிலம், விழுப்புரம் வடக்கு. | |
| 19.01.2024 | 12:30 PM | விக்கிரவாண்டி, விக்கிரவாண்டி, விழுப்புரம் தெற்கு. | **நா.புகழேந்தி** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **செ.தினகரன்** மாவட்ட அமைப்பாளர், விழுப்புரம் தெற்கு. |
| 19.01.2024 | 2:20 PM | விழுப்புரம் (பைபாஸ்), விழுப்புரம், விழுப்புரம் தெற்கு. | |
| 19.01.2024 | 5:00 PM | அரசூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு. | **தா.உதயசூரியன்** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **எஸ்.அருணராஜ்** மாவட்ட அமைப்பாளர், கள்ளக்குறிச்சி வடக்கு. |
| 19.01.2024 | 9:30 PM | உளுந்தூர்பேட்டை, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு. | |
| 19.01.2024 | 2:30 PM | தியாக துருகம், கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி தெற்கு. | |
| 19.01.2024 | 4:10 AM | கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி தெற்கு. | **வசந்தம் க.கார்த்திகேயன்** எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர், **வி.பி.தாகப்பிள்ளை** மாவட்ட அமைப்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு. |
| 20.01.2024 | 6:20 AM | சின்ன சேலம், சின்ன சேலம், கள்ளக்குறிச்சி தெற்கு. | |
| 20.01.2024 | 9:00 AM | தலைவாசல், கெங்கவள்ளி, சேலம் கிழக்கு. | |
| 20.01.2024 | 11:00 AM | ஆத்தூர், ஆத்தூர், சேலம் கிழக்கு. | **எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆர்.ராஜேந்திரன் டி.எம்.செல்வகணபதி** மாவட்டச் செயலாளர்கள், **வீரபாண்டி டாக்டர் ஆ.பிரபு மு.மணிகண்டன் சௌ.அருண் பிரசன்னா கேபிள் சரவணன்** மாவட்ட–மாநகர அமைப்பாளர்கள், சேலம். |
| 20.01.2024 | 1:30 PM | பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், சேலம் கிழக்கு. | |

**தி.மு.க. இளைஞர் அணி**

**அன்பகம், சென்னை – 18**

**நாள் : 17.01.2024**



சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற்று வரும் 47வது சென்னைப் புத்தகக் கண்காட்சியில் நேற்று (18.01.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் முனைவர் சீ.சுரேஷ்குமார், எழுதிய 'வசந்த வாய்ப்புகள்' எனும் நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் மற்றும் டாம்கோ நிர்வாக இயக்குநர் திருமதி ஆசியா மரியம், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்க பொதுச் செயலாளர் முனைவர் இதயகீதம் இராமானுசம், கவிஞர் அக்னிபாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தலைமை நிலையச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மறைந்த கு.க.செல்வம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி அவரது இல்லத்தில் நடைபெற்றது. அன்னாரது படத்தை சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., ஆகியோர் திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினர். உடன் கே.ஏழுமலை , கோ.சு.மணி, கோடம்பாக்கம் மு.சத்யா, கிருஷ்ணமூர்த்தி, எஸ்.கே.நசீர், அவரது குடும்பத்தினர் கே.வீரப்பாண்டி .சதாசிவம், சீமான், டாக்டர்.ராஜேஸ்வரி, கோபால், எக்ஸ்.அலெக்ஸ், கென்னடி மற்றும் கழக முன்னோடிகள் கழக தோழர்கள் உள்ளனர்.

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமை ! பெரம்பூர் தெற்கு பகுதி

## வழக்கறிஞரணி ஜி.மோகன்ராஜ் மணவிழா வரவேற்பு! ஆர்.எஸ். பாரதி வாழ்த்துரை!

### அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சிவ.வீ. மெய்யநாதன், தா.இளையஅருணா எம்.சி. பங்கேற்பு!

சென்னை ஜன:19

சென்னை வடக்கு மாவட்டம்,மொழிப்போர் தியாகி மறைந்த எம். செல்லன், சி.குப்பம்மாள் ஆகியோரின் பேரனும், மறைந்த எம்.சி. குணசேகர்,திருமதி எழிலரசி ஆகியோரின் மகனும், பெரம்பூர் தெற்கு பகுதி வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளருமான ஜி.மோகன்ராஜிக்கும் புதுச்சேரி மாநிலம் எம். சங்கர்,வேல்விழி ஆகியோரின் மகள் எஸ்.சுருதிக்கும் திருமண வரவேற்பு விழா (22.1.2024 திங்கட்கிழமை) மாலை 6.00 மணிக்கு மேல் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,சச்சிதானந்தம் தெருவில் அமைந்துள்ள 'அறிஞர் அண்ணா' திருமண மாளிகையில் நடைபெறுகிறது.



மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் தலைமை ஏற்கிறார்.

க.ஜெயராமன், அ.முருகன், எஸ்.ஆனந்தி, வி.முருகன்,வி.வேதா, சு.மனோகர், வை.கௌதமன், ஜெ.காணிக்கைநாதன், ஜி.கணேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.டி.மணிமாறன், ஜி.ஜெயகுமார், ச.ராஜன்,ஆர்.சீதா, ஆர்.ரகு, பி.கிருஷ்ணமூர்த்தி, இ.கர்ணா,கே.பிரசாத், எம்.ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன், ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

விழாவில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி,

அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, சிவ.வீ.மெய்யநாதன், மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கலாநிதி வீராசாமி எம்.பி, என்.ஆர்.இளங்கோ எம்.பி,இரா.கிரிராஜன் எம்.பி,ப.தாயகம்கவி எம்.எல்.ஏ,இ.பரந்தாமன் எம்.எல்.ஏ,ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன், இரா.கருணாநிதி, சொ.வேலு, இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன்,வி.தயாளன், எ.தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன், டி.கமலக்கண்ணன், க.அமுல், என்.மருதுகணேஷ், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி,சர்பஜெயதாஸ் எம்.சி,க.சர்மிளாகாந்தி எம்.சி,த.ஆறுமுகம், ஆர்.எஸ். மனோகரன், கேபிள்.கே. தினகரன், க.பாபு, ஜி.மாரிமுத்து, கே.வி.ராஜன், மு. உமாபதி, கே.இ.செந்தமிழரசு, இரா.அரிதாஸ், சி. எஸ்.இரவி, என்.கார்த்தீபன் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

செ.மா.சேகர், எம்.சி.தில்குமார், ஜி.சங்கர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் நிகழ்ச்சி ஏற்பாடு !

## எஸ்.பி.சற்குணபாண்டியன் பிறந்தநாள்! பார்வையற்றோர் இல்லத்தில் உணவு!

### டி.கே.எஸ்.இளங்கோவன்,தா.இளையஅருணா வழங்கினர்! சிம்லா முத்துச்சோழன் பங்கேற்பு !

சென்னை ஜன:19

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் பகுதி எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் ஏற்பாட்டில் முன்னாள் கழக துணை பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ். பி.சற்குணபாண்டியன் அவர்களின் 83வது பிறந்த நாளை முன்னிட்டு (14.01.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை இரட்டை குழித்தெரு, தண்டையார் பேட்டையில் உள்ள பார்வையற்றோர் இல்லத்தில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன்,சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஆகியோர் புத்தாடை மற்றும் அறுசுவை உணவு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,சிம்லா முத்துச்சோழன், ஆர். கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், இரா.மதிவாணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, இர.பொன்இளவரசன், தா.தமிழ்கொடி, கு.நற்குணம், நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஏ.டி. மணி, எஸ்.கே.இளங்கோ, என்.மருதுகணேஷ், ஆர். டி.ராஜா, கே.பாலு, கே. பி.சதிஷ்குமார், எம்.வேதலட்சுமி, மாஸ்.டி.வெங்கடேசன், முருகன் அண்ணாச்சி, டி.திராவிடசெல்வி, கட்பீஸ்.பா.தீனதயாளன், கு. ரமேஷ், விமலா மோகன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், மா.நாகராஜ், ச.தமிழ்செல்வன், கே.கருணாநிதி, கே.கண்ணகி கருணாநிதி,சுசிலா, வி.முத்து, பி.அன்பழகன், ச.திருப்பதிசாமி, ஜெ.சுரேஷ்பாபு, டி.ஆர். தணிகாச்சலம், எம்.எம். சாமி, எம்.ரூபசங்கர், கே. மோகன்,டி.லெனின், என். பிரம்மதாசினி, இ.கார்த்திக்,எஸ்.துரை, தமிழ்சிவா,எம்.எஸ்.ரவி, எ.எம்.இளங்கோ, ஜி.பிரேம்குமார், டிஎல்பி. இரவி, ஜி.துரைசாமி, மு.விஜயகுமார், எம். சுரேஷ்குமார், எம்.சரத்குமார், என்.பி.தனுஷ்,சைக்கிள் நடராஜன், இ.கருணாகரன், ஆர்.கே.நகர் சதிஷ், பிரஸ் ஆர்.ரங்கநாதன், பி.அறிவழகன், ஏ.ஆனந்த், கே.தாமோதரன், டி.மனோகரன், எஸ்.கிருஷ்ணசாமி, பி.ரங்கநாதன், எம்.மைக்கில், பேணர் சரவணன், பூக்கடை சினு, டி.மணிமாறன், ஏ.சலாவூதின், எம். கந்தசாமி, பிஎஸ்என்எல். ராஜேந்திரன், ஏ.கோபிநாத், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

எஸ்.தனக்கோட்டி, கே.சாம்சன் ஆகியோர் நன்றி கூறினர்.

### பூந்தமல்லி நகராட்சியில் தமிழர் திருநாளை முன்னிட்டு

## தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

திருவள்ளூர் 19;

தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பூந்தமல்லி நகராட்சி சார்பில் சமத்துவ பொங்கல் விழா நகராட்சி வளாகத்தில் முன்னாள் அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ ஆலோசனை படி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி உத்தரவின்படி நடைபெற்றது.

பூந்தமல்லி நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தலைமை தாங்கினார். நகர் மன்ற துணைத் தலைவர் ஸ்ரீதர், ஆணையர் லதா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். பூந்தமல்லி திமுக நகர செயலாளர் ஜி. ஆர். திருமலை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களுடன் இணைந்து பொங்கல் வைத்தார். பின்னர் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடை மற்றும் பொங்கல் பரிசு தொகுப்புகளை நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் வழங்கி பேசியதாவது:

நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகள். அந்த விவசாயத்துக்கு ஆதாரமாக இருப்பது சூரியன். அந்த சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விழா பொங்கல் விழா. உலகத்திலேயே சூரியனுக்கு, இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் ஒரே இனம் தமிழினம் மட்டுமே. உலகமெங்கும் தமிழர்கள் எங்கெல்லாம் பரவியிருக்கிறார்களோ அங்கெல்லாம் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது . தமிழ்நாட்டுக்காகவும் உலகமெல்லாம் பரவியுள்ள தமிழர்களுக்காகவும் பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் என்று அவர் கூறினார்.

இதையடுத்து அனைவருக்கும் அறுசுவை விருந்து பரிமாறப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் பங்கேற்கும் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மற்றும் தலைவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் நமது மாவட்டத்தில் இருந்து கழக தோழர்களை அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்து மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் அலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாநில நிர்வகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### இன்று தொடங்குகிறது!

## கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மருத்துவ மாநாடு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜன. 19

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (18.01.2024), சென்னை, எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில், ரூ.21.53 கோடி செலவில் குழந்தைகள் நலத் திட்டங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு குழந்தைகள் நல திட்டங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று சென்னை, எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் 6 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்துடன் சேர்த்து இதுவரை 100 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள அறிவிப்புகளும் அடுத்த நிதிநிலை அறிவிப்புக்கு முன்னாள் செயல்பாட்டிற்கு வர உள்ளன. அந்தவகையில் இன்று தேசிய நலவாழ்வு குழுமம் சார்பில் 6 அறிவிப்புகள் இன்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை குழந்தை இறப்பு விகிதம் என்பது 2020-ஆம் ஆண்டு கணக்கின்படி ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளுக்கும் 13 என்கின்ற வகையில் குழந்தைகள் இறப்பு இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு குழந்தைகள் நல திட்டங்கள் செயல்படுத்தியதன் காரணமாக குழந்தைகள் இறப்பு விகிதம் படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது.

1000 குழந்தைகளுக்கு 13 என்கின்ற இறப்பு விகிதம் தற்போது 1000 குழந்தைகளுக்கு 8.2 என்கின்ற விகிதத்தில் குறைந்து இருக்கிறது. சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு இத்தகவலினை வெளியிட்டிருக்கிறது. இன்னமும் கூட குழந்தைகளின் இறப்பினை குறைப்பதற்கு ஏதுவாக பல்வேறு புதிய மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ச்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு பகுதியில் உள்ள நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனையில் பச்சிளங்குழந்தைகளை நிலைப்படுத்தும் பிரிவு ஒன்று தொடங்கிவைக்கப்பட்டது. அந்த வகையில் அடையாறு, பெருமாள் பேட்டை, செனாய் நகர், சைதாப்பேட்டை ஆகிய 4 மருத்துவமனைகளில் குழந்தைகளை நிலைப்படுத்தும் பிரிவுகள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

மேலும் கடந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.8.91 கோடி மதிப்பீட்டில் சென்னை, எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மரபியல் சார்ந்த நோய்கள் மற்றும் மரபு சார் பிற அரிய வகை நோய்களுக்கான ஒப்புயர்வு மையங்கள் அமைக்கப்படும் என்று கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி நேற்று சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ.2.97 கோடி செலவில் ஒப்புயர்வு மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் ரூ.4.76 கோடி செலவில் 74 சிறப்பு பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவுக்கு உயிர்காக்கும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுள் ஒன்றான தாய்ப்பால் வங்கிகளுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள் (Laminar Flow) வழங்கி பலப்படுத்திட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி இன்று 27 தாய்ப்பால் வங்கிகளுக்கு ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் 78 உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு தாய்ப்பால் வங்கிகளுக்கு தாய்ப்பால் வழங்கிக் கொண்டிருக்கும் தாய்மார்களை பாராட்டும் வகையில் நற்சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது.



அதேபோல் சிசு இறப்புகளை மேலும் குறைப்பதற்கு அனைத்து மாவட்டங்களிலும் அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் குழந்தைகளின் நலனை வீட்டிற்கே தேடிச் சென்று கண்காணிப்பது என்கின்ற வகையில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. அதன்படி சிறு குழந்தைகளை பராமரிப்பதற்கு 2650 கிராமப்புற சுகாதார பணியாளர்கள் (ஆஷா) கிராமப்புற தன்னார்வலர்களும், 54,439 அங்கன்வாடி பணியாளர்களுக்கும் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இத்திட்டத்தின் கீழ் 2 வயதிற்குட்பட்ட எடை குறைந்து பிறக்கும் குழந்தைகளை தீவிரமாக கண்காணிக்கும் வகையில் வீடுகளுக்குச் சென்ற பிறகு ஒவ்வொரு குழந்தைகளையும் 5 முறை அவர்கள் இருக்கும் இடங்களுக்கே தேடிச்சென்று அக்குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிகிச்சைகள் குறித்த விவரங்களை மருத்துவமனை நிர்வாகத்திற்கு தெரிவிக்கும் வகையில் இப்பணியாளர்களுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது.

இப்பணிகள் செய்திடும் ஆஷா பணியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.250 வழங்கப்படும். அதேபோல் குழந்தை பருவ மதிப்பீடு என்கின்ற கருவி, சுகாதாரப் பணியாளர்களுக்கும், கல்வியாளர்களுக்கும், பெற்றோர்களுக்கும், குழந்தைகள் வளர்ச்சி மற்றும் சுகாதார தகவல்களை சேகரித்து வழங்குகின்ற மிக முக்கியமான கருவியினை ரூ.11.75 இலட்சம் செலவில் இன்று வழங்கப்பட்டுள்ளது.

**பன்னாட்டு மருத்துவ மாநாடு**

இந்திய வரலாற்றில் வேறு எந்த மாநிலத்திலும் மருத்துவம் தொடர்பான மாநாடு நடத்தப்படவில்லை. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ், மருந்தகம், மறுவாழ்வு அறிவியல் ஆகியவை தொடர்பான சுகாதார திட்டங்களை மாநாடு மூலம் ஆய்வு செய்வதும், பல்வேறு நாடுகளில் இருந்து மருத்துவர்கள் பங்கேற்கும் வகையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பு நாளை (19.01.2024) செயலாக்கத்திற்கு வருகிறது. 19.01.2024 காலை 10.00 மணிக்கு தொடங்கப்பட்டு 21.01.2024 வரை 3 நாட்கள், நந்தனம், வர்த்தக மையத்தில், சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கி வரும் சேவைகள் வலுப்படுத்தும் வகையில், மருத்துவ ஆய்வு கட்டுரைகளை விவாதிப்பதற்காகவும், கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மருத்துவ மாநாடு நடத்தப்படவுள்ளது. இந்த மாநாட்டில் 11,000 பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் சார்பில், அதன் துணை வேந்தர் அவர்களும் துறையின் செயலாளர் அவர்களும் இந்த மருத்துவ மாநாடு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். புது டெல்லி, மேற்கு வங்காளம், தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, மேகாலயா, அசாம் போன்ற பல்வேறு மாநிலங்களில் இருந்தும் 182 மருத்துவ துறையினை சார்ந்த பேச்சாளர்கள் இந்த மாநாட்டில் உரையாற்ற உள்ளனர். மேலும் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், கத்தார் உள்ளிட்ட நாடுகளில் இருந்து புகழ்பெற்ற 28 மருத்துவ வல்லுநர்கள் தங்களுடைய கருத்துகளை தெரிவிக்க உள்ளனர்.

இந்த மாநாட்டில் 27 சிறப்பு அமர்வுகள், 5 குழு விவாதம், 50 இணை அமர்வுகள், பொதுமக்கள் கருத்துகளை தெரிவிக்கும் வகையில் பொதுமக்கள் அமர்வு ஆகியவை நடைபெறவுள்ளது. மேலும், மருத்துவ மாணவர்களுக்கு எண்டோ பயிற்சி திட்டமும், பொதுமக்களுக்கு மேமோகிராம் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மருத்துவ பேராசிரியர்கள், முதுநிலை மருத்துவ மாணவர்கள் "மருத்துவத்தின் எதிர்காலம்" என்ற கருப்பொருளில் 600 அறிவியல் ஆராய்ச்சி சுருக்கங்களை வெளியிடவுள்ளனர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.ப்ரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.ரமா சந்திரமோகன், எழும்பூர், மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.கலைவாணி மற்றும் மருத்துவத்துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழக இலக்கிய அணி துணைத் தலைவர்

## கவிச்சுடர் கவிதைப்பித்தன் தாயார் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 19-

கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் தாயார் லூர்து மேரி அவர்கள் நேற்று முன்தினம் (17.1.2024 - புதன்கிழமை) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, தாயாரை இழந்து வாடும் கவிச்சுடர் கவிதைப் பித்தனுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.



அய்யன் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. லஸ் சந்திப்பில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு சிற்றுண்டி மற்றும் திருக்குறள் புத்தகம் வழங்கினார். உடன் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி ,மாவட்ட துணை செயலாளர் மலர், பகுதி தலைவர் ஜீ. ஆர்.ராஜேந்திரன் முன்னிலை, 121 வட்ட செயலாளர் ராஜவேலு வரவேற்பு 121 அ வட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, 122 வட்ட செயலாளர் நாகராஜ் மற்றும் இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் அயன் ர.ரமேஷ், மயிலை கிழக்கு தலைவர் பி.எஸ்.ஆறுமுகம், மற்றும் துணை அமைப்பாளர்கள் ஜி.கே.சிங்காரவேலு, சதீஷ், கே.ஆர்.குமார் மற்றும் வட்ட கழக பகுதி கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (18.01.2024) நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் தலைமையில் 2024–25 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தயாரிப்பு தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அரசு நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், அரசு செயலாளர்கள் தொழில் நிறுவனத்தினர். குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜார்க்கண்ட்:
# விரைவு ரயில்மோதி 4 பேர் உயிரிழப்பு!

ராஞ்சி,ஜன.19-

ஜார்க்கண்ட், சேராய்கேலாகார்ஷ்வான் மாவட்டத்தில் கமாரியா ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தை கடக்க முயன்ற உள்ளூர் பொதுமக்கள் 4 பேர் விரைவு ரயில் மோதி உயிரிழந்தனர்.

மாவட்டத்தின் கமாரியா ரயில் நிலையம் அருகேயுள்ள குடிசைப் பகுதிகளில் வசிக்கும் 4 பேர் தண்டவாளத்தைக் கடக்க முயற்சித்துள்ளனர்.

அப்போது, அவ்வழியாக வந்த புரி நோக்கி செல்லும் உத்கல் விரைவு ரயில் அவர்கள் மீது மோதியது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 7 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில், 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த உள்ளூர் காவல்துறை மற்றும் ரயில்வே பாதுகாப்பு படையினர் உடல்களை மீட்டு உடல் கூராய்வுக்கு அனுப்பிவைத்தனர்.

விபத்து காரணமாக வந்தேபாரத், துரோந்தோ மற்றும் பிற விரைவு ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

## சேலத்தில் இளைஞர் அணி மாநாடு:
# தி.மு.க.வுக்கு வாளும் கேடயமாக அமைய வாழ்த்துகள்!
## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜன.19-

வரும் 21-ஆம் தேதி சேலத்தில் நடத்தப்படவிருக்கும் தி.மு.க. இளைஞரணி மாநில மாநாடு வரலாற்றுத் திருப்புமுனையாக, தி.மு.க.வுக்கு வாளும், கேடயமாக அமைய வாழ்த்துகள் என்று கூறி, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

வருகின்ற 21.1.2024 அன்று சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி மாநாடு மிகச் சீரும் சிறப்புடனும் வரலாறு படைக்கும் வண்ணம் நடத்தப்படவிருக்கிறது.

திராவிடர் கழகம் பிறந்த தாய் மண்ணாம் சேலத்தில் நடப்பது வரலாற்றுப் பொருத்தமும், சிறப்பும் ஆகும்.

**உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இளைஞரணியின் பீடுநடை!**

தமிழ்நாட்டின் வடக்கிலும், தெற்கிலும் பெய்த வரலாறு காணாத மழை, வெள்ளக் கொடுமைகளால் தள்ளி வைக்கப்பட்ட அம்மாநாடு, நாடே வியக்கத்தக்க வகையில் நடக்கவிருப்பதும், அதில் இளைஞர்களின் பாசறை முழக்கமும், கொள்கைப் பயணத்திற்கான பட்டறைப் பாய்ச்சலும் நாம் காணவிருக்கும் பெறற்கரிய பெரும் வாய்ப்பு!

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தி.மு.க. இளைஞரணிக்கு செயலாளராகப் பொறுப்பேற்றது தி.மு.க.வின் லட்சியப்பயணத்திற்கே ஒரு திருப்பத்தை உருவாக்கியது.

புத்தாக்கத்தோடு இயக்க இளைஞர்களைப் பகுத்தறிவுப் பாசறையின் பயிற்சி பெற்ற கொள்கைத் தங்கங்களாக்கிட அனைத்து முயற்சிகளை யும் செய்து, பல்வேறு முனையங்களை ஏற்படுத்தி, கழக இளைஞர்களை கொள்கைக் கூடாரத்திற்கு, லட்சியப் போருக்குக் களம் காணும் அறிவுப் போர் வீரர்களாகப் பக்குவப்படுத்த அனைத்து முறைகளிலும், அதன் ஆற்றல்மிகு செயலாளர் 'காற்று வேகத்தில்' காரியமாற்றிவரும் கருத்துக் கனலாக, திராவிட இயக்கத்தின் கொள்கைப் புனலாக இயக்க இளைஞர்களை செதுக்கிச் செயலூக்கம் தந்து, செம்மாந்த நடையர்களாக்கிடும் அரிய சாதனையில் பெரிய வெற்றியைக் குறுகிய காலத்தில் அடைந்துள்ளார்.

**ஈரோட்டுப் பாதையில் அண்ணா, கலைஞர் வழியில்...**

தந்தை பெரியாரின் ஈரோட்டுப் பாதையில் அண்ணா, கலைஞர் ஆகியோர் வழியில், இன்று 'திராவிட மாடல்' ஆட்சி அமைந்து, 'இந்தியாவே' பெருவியப்புடன் பார்க்கும் தி.மு.க.வின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெருந்துணையோடும், தூய்மையோடும் நடந்து, தி.மு.க.வில் இளைஞர்களின் எழுச்சி நம்பிக்கையாக புதிய பொன்னேட்டை திராவிடர் இயக்க வரலாற்றில் இணைத்து வருகிறார்; அது இவரது குறுகிய கால ஈடு இணையற்ற தொண்டறம்.

எனவே, உதயநிதி தி.மு.க.வுக்கு மட்டுமல்ல, "கொள்கை வேட்டி; பதவி துண்டு" என்று நம் அண்ணா கூறியதை அப்படியே இந்த இளம்வீரர் இனமான உணர்வுடன் வற்றாது வளையாது ஓடும் கொள்கை நதியாகவே காட்சியளித்து, ஆரியத்தையும், அதற்கு ஆலவட்டம் சுற்றுவோரையும் அடிவயிற்றில் நாளும் புளியைக் கரைத்துக் கொண்டே உள்ளார்!

தாய்க்கழகத்தின் பூரிப்புக்கும், புளகாங்கிதத்திற்கும் எல்லையே இல்லை!

**எத்தனை எத்தனை செயற்பாடுகள்!**

வெற்றுப் புகழ்ச்சியல்ல இது; (அது நமக்கு என்றும் இல்லாத பழக்கம் என்பதை அகிலம் அறியும்!)

அவர் தி.மு.க. இளைஞரணி செயலாளராகப் பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலத்திற்குள், சாதித்தவை மிகவும் வியந்து பாராட்டத்தக்கவை.

1. தமிழ்நாடு முழுவதும் பயிற்சிப் பட்டறைகள்
2. கழக மூத்த முன்னோடிகளை, முதுபெரும் பெரியவர்களை நேரில் சந்தித்து, பொற்கிழி அளித்துப் போற்றல்.
3. சமூக வலைதளத்தில் செயல்பாடு, தன்னார்வலர்களுக்கு நேரடிப் பயிற்சி விருது!
4. முரசொலி பாசறை பக்கம் என்ற கொள்கை ஊசிகள்!
5. அவதூறுகளை முறியடிக்கும் சி.ஏ.ஏ., 'நீட்', பொய்ப் பெட்டி நிகழ்ச்சி.
6. ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் தீவிரம்.
7. பெரியார், ஸநாதனம், பகுத்தறிவுக் கருத்துகளில் சமரசமற்ற உறுதி!
8. மாணவரணி மற்றும் பிற அணிகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பு.
9. தொகுதிதோறும் கலைஞர் நூலகங்கள் (இது வரை சுமார் 30).
10. தந்தை பெரியார் வழியில், ''முத்தமிழறிஞர் பதிப்பகம்'' என்று நூல் வெளியீட்டகம்மூலம் 'நூலின்' வாலாட்டத்தை ஒடுக்கும் அறிவுத் திருப்பணி.

இப்படி எத்தனை எத்தனையோ!

இதற்குப் பிறகே இந்த எழுச்சிமிகு இளைஞரணி மாநில மாநாடு!

மாநில உரிமைகள் பற்றி இந்திய நாட்டிற்கே இந்த இளைஞர் மாநாடு கலங்கரை வெளிச்சமாகி வழிகாட்டி, வரலாற்றுப் பதிவினைச் செய்யும் என்பது உறுதி!

இப்போது புரிகிறதா? தாய்க்கழகம் ஏன் இந்த இளைஞர் படைத் தளபதியை உச்சிமோந்து, மெச்சி ஊக்கப்படுத்துகிறது என்று.

அரசியல், தேர்தல் இவற்றைத் தாண்டி, அடுத்த தலைமுறை காக்கும் மான மீட்பு உரிமைப் பணியில், மகத்தான அத்தியாயமாக இம்மாநாடு வெற்றி அடையும் என்று தளரா நம்பிக்கையுடனும் வாழ்த்துகிறோம்!

ஒப்பற்ற 'திராவிட மாடல்' ஆட்சியின் வாளும், கேடயமாகவும், சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் முரசொலியாக வும் அமையட்டும்!

**திராவிடம் வெல்லும் நாளை வரலாறு சொல்லும்!**

தி.மு.க. ஆட்சியின் காவல் படையாக எதிரிகளை எந்த நிலையிலும் எதிர்கொள்ளும் இளைஞர்களின் இப்படை அதன் செயலாளர் தலைமையில் தோள்தட்டி, தொடை தட்டிப் புறப்பட்டுள்ளது!

"இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்?"

என்ற முழக்கத்தோடு, வெற்றி வாகை சூட களம் காணும் கழகச் சிங்கக் குட்டிகளுக்கு நமது உளமார்ந்த பெரியார் வாழ்த்துகள்!

"திராவிடம் வெல்லும் அதை நாளைய வரலாறு சொல்லும்'' என்பது உறுதி! உறுதி!! உறுதி!!!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தி.மு.க. மாணவர் அணி
# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!
## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நாளை (20.1.2024 சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில், சேலம் மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் மாளிகை" 'வீரபாண்டியார் அரங்கத்தில்' எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி, மாணவர் அணி இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) 27.01.2024 அன்று சென்னையில் நடைபெற உள்ள மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்; 2) 01.02.2024 அன்று, சென்னையில் யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பின் சார்பில் நடைபெற உள்ள மாபெரும் மாணவர் பேரணி; 3) கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி; 4) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18 - நாள்: 18.01.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர் - தி.மு.க. மாணவர் அணி



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் தித்திக்கும் பொங்கல் திருநாளை முன்னிட்டு தூய்மைப் பணியாளர்களுக்கு பொங்கல் தொகுப்பு, நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் – திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் சி.தசரதன், குறிஞ்சி எஸ்.கணேசன், டி.ஏ.ராஜ்,சாந்தி பக்தன், எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத்,கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழசெல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல், ம.ஜெயராமன், பி.எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், ஆர்.டில்லிராஜ் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

# 'மாநில உரிமை முழக்கம்' - இது நிகழ்காலத் தேவை!

**மாநிலங்களின் வளர்ச்சியிலும் வலிமையிலும்தான் இந்திய ஒன்றியத்தின் உறுதித்தன்மை நீடித்து நிலைத்திருக்கும் என்பதே கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படை. திராவிட முன்னேற்றக் கழகம் இதனை அரை நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றி இந்திய ஒன்றியத்திற்கான கூட்டாட்சிக் கொள்கையை அனைத்து மாநில அரசுகளையும் உணரச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவருடைய தொலைநோக்குப் பார்வையும் முழக்கமும், இன்று பல மாநிலங்களிலும் எதிரொலிப்பதைக் காண முடிகிறது.**

பிரதமர் நரேந்திர மோடி குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர். அப்போது மாநில உரிமைகள் குறித்து அதிகம் பேசியவர். ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்த டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசிடம் தனது மாநிலத்திற்கு அதிக நிதியைக் கோரியவர். வரி வசூல் உரிமையை மாநிலங்களிடமிருந்து பறிக்கும் ஜி.எஸ்.டி. முறையை அன்றைக்கு எதிர்த்தவர்தான் மோடி. மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வையும் மோடியின் குஜராத் மாநில அரசு எதிர்த்தது. 2001ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, பின்னர் இந்தியாவின் பிரதமர் ஆனார்.



**-கோவி.லெனின்**
கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

மாநிலத்தின் முதலமைச்சராக அதன் நிதித் தேவையை அறிந்தவர், நாட்டின் பிரதமராகும்போது மாநிலங்களின் உரிமைகள் மதிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதற்கு நேர்மாறாக செயல்பட்டது மோடியின் அரசு. இரவு நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டி ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. கருப்புப் பண ஒழிப்பு என்ற பெயரில் நடுஇரவில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நடுச்சாலையில் மக்களை அல்லாட வைத்த மோடியின் ஆட்சி, கடைசி வரை கருப்புப் பணத்தை ஒழிக்கவில்லை. கலர் கலராக புதுப்புது ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதும், பின்னர் அதனை மோடி அரசே ரத்து செய்வதுமாக விளையாட்டுக் காட்டியதைத் தவிர உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

**அகண்ட பாரதம் எனக் கனவு காணும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் இருப்பதையோ, மாநில அரசுகள் வலிமைபெற்று இருப்பதையோ தனது கொள்கைப்பூர்வமாக விரும்புவதில்லை. மாநிலங்களை 'முனிசிபாலிட்டி– பஞ்சாயத்து' அளவுக்கான அதிகாரத்தில் வைத்துக்கொண்டு, ஒன்றிய அரசிடம் எல்லா அதிகாரங்களையும் குவித்திட வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம். தன் சித்தாந்தங்களை பா.ஜ.க. அரசு மூலம் நிறைவேற்றத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் விருப்பத்திற்கேற்ப, மாநிலங்களையும் அதன் உரிமைகளையும் சிதைக்கிறது பா.ஜ.க. அரசு.**

இந்திய வரைபடத்தின் தலைப்பகுதியில் உள்ள ஜம்மு-காஷ்மீர் தனது மாநில அந்தஸ்தை பா.ஜ.க. ஆட்சியில் இழந்து, அதிகாரங்கள் குறைக்கப்பட்ட இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிளவுபடுத்தப் பட்டிருக்கிறது. அங்கே தேர்தலும் நடத்தப்படவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும் இல்லை. தேர்தல் நடத்தப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் யூனியன் பிரதேசம் என்ற முறையில் ஆளுநர், துணை நிலை ஆளுநர் இவர்களிடமே அதிகாரம் குவிந்திருக்கும். நம் அருகில் உள்ள புதுச்சேரி அரசில் தொடங்கி, தலைநகரத்தில் உள்ள டெல்லி அரசு வரை படும் பாட்டை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இத்தனையும் நடப்பது 13 ஆண்டுகாலம் குஜராத்தின் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி இந்திய ஒன்றியத்தின் பிரதமராக இருந்து வரும் இந்த 10 ஆண்டு காலத்தில்தான்.

மாநிலங்களைக் காலடியில் போட்டு நசுக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் மறைமுகத் திட்டத்தை நேரடியாகப் போட்டு உடைத்திருக்கிறார் நிதி ஆயோக் அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி பி.வி.ஆர்.சுப்பிரமணியம். நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு, 2014ல் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய அரசின் முதல் நிதிநிலை அறிக்கையின்போதே, மாநில அரசுகளுக்கான நிதிப் பகிர்வைக் குறைப்பது பற்றி நிதிக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது பா.ஜ.க. அரசு.

சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான மையத்தின் சார்பில் இந்தியாவின் நிதி அறிக்கை என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் வெளிப்படையாக சில உண்மைகளைப் பேசியிருக்கிறார் சுப்பிரமணியம். 2013ஆம் ஆண்டு 14வது நிதிக்குழு அமைக்கப்பட்டபோது குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, ஒன்றிய அரசின் வரிகளிலிருந்து மாநிலங்களுக்கு 50% அளவுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கேட்டது அப்போது தலைப்புச் செய்தியாக வெளியானது. 2014ஆம் ஆண்டு டிசம்பரில் 14வது நிதிக் குழு தனது அறிக்கையை முன்வைக்கிறது. அதுவரை ஒன்றிய அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு 32% மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில், இனி 42% வழங்கலாம் என நிதிக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்த நிலையில், பிரதமராகிவிட்ட நரேந்திர மோடியும் அவரது நிதி அமைச்சகமும், மாநிலங்களுக்கு 33% வரியைப் பகிர்ந்தளித்தால் போதும் என வலியுறுத்தியதை சுப்பிரமணியம் வெளிப்படுத்தியுள்ளார்.

**முதலமைச்சராக 50% கேட்டவர், பிரதமரானதும் 33% மட்டும்தான் தரமுடியும் என்ற நிலைப்பாட்டை எடுத்ததையும், அதற்கான நிதிக்குழுத் தலைவராக இருந்த ஒய்.வி.ரெட்டியிடம், நடைமுறைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் மாறாக கொல்லைப்புறம் வழியாகப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதையும் , அதில், அப்போது பிரதமர் அலுவலகத்தின் இணைச் செயலாளராக இருந்த, தான் பங்கேற்று இரண்டு மணிநேரம் பேசியதையும் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். நிதிக் குழுவின் பரிந்துரைகளை நிராகரிக்கவும், புதிய நிதிக்கழு அமைக்கவுமே ஒன்றிய அரசுக்கான அதிகாரத்தை அரசியல் சட்டம் வழங்கியுள்ள நிலையில், 42% அளவுக்கு வரிப் பகிர்வை மாநிலங்களுக்கு வழங்கலாம் என்ற நிதிக் குழுவின் அறிக்கையை ஏற்க மறுத்தாலோ, புதிய நிதிக்குழு அமைத்தாலோ, முதலமைச்சராக இருந்தபோது மாநிலங்களுக்கு 50% வரை வரிப் பகிர்வு செய்யப்பட வேண்டும் என்ற மோடியின் இரட்டை வேடம் அம்பலமாகிவிடும் என்பதாலேயே, அறிக்கையில் திருத்தம் செய்யச் சொல்லி, கொல்லைப்புற வழியைக் கடைப்பிடித்துப் பார்த்துள்ளது பா.ஜ.க. அரசு. திருத்தம் செய்ய அரசியல் சட்டம் அனுமதிக்காது என்பதை நிதிக்குழுத் தலைவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

பா.ஜ.க. அரசு இதையெல்லாம் மறைத்து, மாநிலங்களுக்கான வரிப் பகிர்வை உயர்த்தி வழங்குவதில் நிதிக் குழு உறுப்பினர்களிடையே மாறுபட்ட கருத்துகள் இருந்ததாகவும், தங்களுடைய அரசுதான் மாநிலங்களின் நலன் கருதி வரிப்பகிர்வை உயர்த்தியதாகவும் நாடாளுமன்றத்தில் மோடி பேசியதையும் அம்பலப்படுத்தியிருக்கிறார் சுப்பிரமணியன். அதுமட்டுமின்றி, "நாம் கொடுக்கும் வரிப் பகிர்வுத் தொகையை வைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு சில மாநிலங்களிடம் பெரிய கருவூலம் இல்லை" என்று பிரதமர் மோடி 'புளிப்புக் காமெடி' செய்ய, அதற்கு பா.ஜ.க. உறுப்பினர்கள் மேஜையைத் தட்டி சிரித்ததையும் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மாநில அரசுகளின் அதிகார வரம்பிற்குட்பட்ட, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான (கர்ப்பிணிப் பெண்கள், சிசுக்கள், பாலூட்டும் தாய்மார்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு) 36ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீட்டை மோடி அரசு தனது முதல் பட்ஜெட்டில் பாதிக்குப் பாதியாக 18ஆயிரம் கோடி ரூபாய் எனக் குறைத்ததையும், அதுபோல பள்ளிக்கல்விக்கான நிதி ஒதுக்கீடு முந்தைய (2013-14)ஆண்டைவிட 18.4% குறைக்கப்பட்டதையும் அம்பலப்படுத்தும் சுப்பிரமணியம், மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் முதல் நிதிநிலை அறிக்கையின் அம்சங்களை நிதிக்குழு ஏற்க மறுத்ததையும், நிதிநிலை அறிக்கை திருத்தி எழுதப்பட்டதையும் குறிப்பிடுகிறார்.

அதானி நிறுவனத்தின் பங்கு மதிப்பீட்டு மோசடியை அம்பலப்படுத்திய ஹின்டன்பர்க் அறிக்கையைப் போல, இந்திய ஒன்றிய அரசின் நிதி தொடர்பான கணக்கு வழக்குகள் வெளிப்படைத் தன்மையுடன் முன்வைக்கப்பட்டால் முழுமையாக அம்பலமாகிவிடும் என்று அந்தக் கருத்தரங்கில் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். "ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் என்ற பெயரில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சில உண்மைகளை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து மறைக்கிறார். மாநிலங்களுக்குத் தர வேண்டிய நிதியை வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக குறைவாகத் தருகிறார்" என்ற குற்றச்சாட்டையும் அவர் வைத்துள்ளார்.

Tip of the Ice Berg **என்பது போல, மாநில உரிமைகள் பறிப்பு என்கிற பெரும் பனிப்பாறையின் ஒரு துளிதான் நிதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரியின் வெளிப்பாடு. மொழி ஆதிக்கம் தொடங்கி, ஆளுநரைக் கொண்டு இணை அரசாங்கம் நடத்த முயற்சிப்பது வரை அரசியல் சாசனத்திற்கு எதிரான செயல்பாடுகள் பா.ஜ.க. ஆட்சியில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பா.ஜ.க. ஆட்சி செய்யாத– ஆட்சி செய்ய வாய்ப்பே இல்லாத மாநிலங்கள் திட்டமிட்டு பழி வாங்கப்படுகின்றன. இதை முறியடிப்பதற்கான குரல் , அண்ணா–கலைஞர் வழியில் மீண்டும் தெற்கிலிருந்து ஒலிக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டிருக்கிறது.**

கழகத் தலைவர்- முதலமைச்சர் அவர்களால் வளர்க்கப்பட்ட இளைஞரணியின் இன்றைய செயலாளர்- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் ஜனவரி 21ஆம் நாள் சேலத்தில் நடைபெறும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு, மாநில உரிமை முழக்கத்தை முன்வைக்கிறது. அது இந்தியா முழுமைக்கும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் ஒலித்தாக வேண்டிய நிகழ்காலத் தேவை உள்ளது.

மாநில உரிமைக் குரல் ஓங்கியும் ஒருங்கிணைந்தும் ஒலிக்கும்போது, ஜனநாயகத்திற்கு எதிரான அதிகார மையங்கள் தகர்ந்து வீழும்.


நாள் : 21.1.2024 – இடம் : சேலம்
கருப்பின மக்களின்
விடுதலைப் போராளி
சேகுவேரா
தமிழின மக்களின்
உரிமைப் போராளி
எங்கள் உதயநிதி
புன்னகை புரட்சியாளனே
உமது எழுச்சிமிகு
இளைஞர் அணி தி.மு.க.
2 வது மாநில மாநாடு
வெற்றிக்கு இதயங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்
பி.கே.சேகர்பாபு
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
இராணிப்பேட்டை ஆர்.காந்தி
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.
மாவட்டக் கழகச் செயலாளர் – சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.
ARASU ARTS
அன்புடன் புழல் M.நாராயணன் B.Sc., M.A., B.L.,
மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர்

## சேலம் செல்ல நான் தயாராகிவிட்டேன்!

# நீங்களும் தயாராகிவிட்டீர்களா?

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

‘நெருப்பின் பொறிகளே! நீங்கள் தான் தேவை!– என்று சொன்னார் தமிழினத் தலைவர் கலைஞர்!

அத்தகைய கனல் தெறிக்கும் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

இளைஞரணியின் எழுச்சிமிகு இரண்டாவது மாநாடு சேலத்தில் சனவரி 21–ஆம் நாள் நடைபெற இருக்கிறது.

சேலத்துக்கு வர நான் தயாராகிவிட்டேன். நீங்கள் தயாராகிவிட்டீர்களா?

**என்னைப் பார்க்கும்போது உங்களுக்குள் எப்படி ஒரு உற்சாகமும் புத்தெழுச்சியும் பிறக்கிறதோ...**

**அதேபோல் உங்களைப் பார்க்கும் போது எனக்குள்ளும் உற்சாகமும் – புத்தெழுச்சியும் பிறக்கிறது!**

**கழக உடன்பிறப்புகளான உங்களின் முகங்களைப் பார்ப்பதும் – நீங்கள் எழுப்பும் கொள்கை முழக்கங்களைக் கேட்பதும்தான் – எனக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தரும் விஷயங்கள்!**

இன்று நேற்று அல்ல; 1980–இல் இருந்தே இது எனக்குப் பழக்கமாகி விட்டது!

எப்போது தலைவர் கலைஞரும் இனமானப் பேராசிரியரும் இளைஞரணியை உருவாக்கி, என்னிடம் ஒப்படைத்தார்களோ, அன்றில் இருந்து, தொண்டனுக்குத் தொண்டனாக, உடன்பிறப்புகளுக்கு உடன்பிறப்பாகத் தான் செயல்பட்டு வருகிறேன்

இன்றைக்குக் கூட, கழகத் தலைவராக அல்ல, தலைமைத் தொண்டனாகத்தான் செயல்படுகிறேன்.

கொள்கை உறவு உடன்பிறப்புகளின் மாநாடுதான் சேலம் மாநாடு.

2007–ஆம் ஆண்டு திக்கெட்டும் புகழும் திருநெல்வேலிச் சீமையில் இளைஞரணியின் முதல் மாநாட்டை நான் தலைமை வகித்து நடத்திக் காட்டினேன்.

இப்போது 2024–ஆம் ஆண்டு சீர்மிகு சேலத்தில் இளைஞரணியின் இரண்டாவது மாநாட்டை இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி அவர்கள் சிறப்போடு ஏற்பாடு செய்து நம்மை எல்லாம் அழைத்திருக்கிறார்.



**இளைஞரணி மாநாட்டின் நோக்கம் மாநில உரிமைகளை வென்றெடுப்பது என்று இளைஞரணிச் செயலாளர் உதயநிதி திட்டமிட்டிருக்கிறார். மாநில உரிமைகளைக் காப்பதுதான் இந்தியாவைக் காப்பது! அந்த வகையில் ‘இளைஞரணி மாநாடு, இந்தியாவின் மாநாடு’ என்று சொல்லத்தக்க வகையில் பிரமாண்டமாக நடக்க இருக்கிறது.**


இந்திய நாடு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கும், இந்தியா கூட்டணியின் ஆட்சி, மாநில உரிமைகளை மதிக்கிற ஆட்சியாக அமைய வேண்டும்; அமையும்!

இதற்கெல்லாம் தொடக்க மாநாடாகச் சேலம் மாநாடு அமையப் போகிறது.

**எனது உடன்பிறப்புகளே! கழக உடன்பிறப்புகளே! கலைஞரின் உடன்பிறப்புகளே!**

**சேலம் செல்ல நான் தயாராகி விட்டேன்! நீங்களும் தயாராகி விட்டீர்களா?**

**சேலத்தில் எனது கண்கள், உங்களது முகங்களைத்தான் தேடும்! சேலத்தில் சந்திப்போம்!**









கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டை முன்னிட்டு, சேலம் மாநாட்டுத் திடல் நோக்கிய சுடர் தொடர் ஓட்டத்தை சென்னை அண்ணா சாலையில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைகளுக்கு அருகே நேற்று காலை தொடங்கி வைத்தார். இந்தச் சுடர், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் அணி தோழர்களால் மாநாடு நடைபெற இருக்கிற சேலம் பெத்தநாயக்கன்பாளையத்திற்கு கொண்டு சேர்க்கப்படவுள்ளது. சேலம் மாநாட்டுத்திடலில் நாளை (ஜனவரி 20ஆம் தேதி) மாலை இளைஞரணியின் மாநில துணைச் செயலாளர்களால் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கப்படவுள்ள மாநாட்டுச் சுடர், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

# திராவிட சினிமா 41

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**








# எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன் – 4

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

திராவிட சினிமாக்களுக்கும், அவை எம்.ஜி.ஆரே நடித்தவையாக இருந்தாலும், எம்.ஜி.ஆர். சினிமாக்களுக்குமான அடிப்படையான வேறுபாடுகள் அப்பட்டமானவை. திராவிட சினிமாக்கள் அடிப்படையில் நாயகத்துவ உருவாக்க நோக்கம் அறவே இல்லாதவை. ஆனால், அதன் நோக்கமான கருத்தியல் பரப்புதலையும் மீறி, அதன் வழியாகவே, தனது நாயகத்துவத்தை வளர்த்தெடுத்தவர் எம்.ஜி.ஆர்.



குறிப்பாக, கலைஞரது 'மலைக்கள்ளன்' போன்ற திரைப்படங்கள் உருவாக்கிக் கொடுத்த 'எளியவர்கள் நலன் கருதும் நாயகத்துவத்தை' கவனமாக திராவிடக் கருத்தியல் பேசாத படங்களின் வழியாகவும் வளர்த்தெடுத்தார். எம்.ஜி.ஆருக்கு சாதகமான இன்னொரு கூறையும் மறுத்துவிட முடியாது.

ஆம், அது திரைப்பட வணிகம் எனும் தவிர்க்க முடியாத ஒன்று. அதன் பண்பிலேயே திரைப்பட வணிகம் நாயகனுக்கான தீராத வேட்கை கொண்டது. அதன் பொருட்டு நாயகத்துவ உருவாக்கத்துக்கு இயல்பாகவே துணை போகும். சாமரம் வீசும் குணாம்சமும் அதனிடம் உண்டு.

## சாகசத்துக்கு சிவப்புக் கம்பளம்

நாயகத்துவம் இரண்டு நிலைகளில் உருவாக்கப்படுபவை. ஒன்று உணர்ச்சிகரமான கதைக்களத்தில் அதனை வெளிப்படுத்தும் வகையான உணர்ச்சி ததும்பும் நடிப்பு. மற்றொன்று சாகச வீரன் (ஆக்ஷன் ஹீரோ) வகை நாயகத்துவம். பெரும்பாலும், உலகமெங்கும் வணிகத் திரைப்படங்கள் இந்த இரண்டாம் வகை நாயகனையே பேணி வளர்க்கும் என்பது நிறுவப்பட்ட ஒன்று.

தமிழ்த் திரைப்படங்களின் மாபெரும் 'ஆக்ஷன் ஹீரோ' எம்.ஜி.ஆர். என்பதை மறுக்க முடியாது. அதனை அவர் கட்டமைத்துக் கொள்ள வணிக முதலாளிகள் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றனர். ஐம்பதுகளிலேயே எம்.ஜி.ஆர். திராவிடக் கருத்தியல் சாராத எழுத்தாளர்களை ஆதரித்து, அரவணைத்துக் கொண்டார். 'மலைக்கள்ளன்' வெற்றியைத் தொடர்ந்து, அதே பாணியில் சாகச நாயகனாக, டி.ஆர்.ராமண்ணா இயக்கத்தில் 'குலேபகாவலி' (1955), மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரம் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' (1956) படங்களிலும் நடித்தார். மாபெரும் வெற்றிப் படங்களான அவற்றில் அவரது கட்டற்ற சாகச நாயகன் பிம்பம் முழுமையாக வளர்த்தெடுக்கப் பட்டது. அதற்குத் தடையாகக் கருத்தியல் சொல்லப் பட வேண்டிய தேவைகள் அறவே இல்லை.

ஆனால், இப்படி வளர்ந்த பிம்பத்தைத் திராவிடக் கருத்தியல் பேச முனைந்த திரைப்படங்களும் எந்த வகையிலும் மட்டுப்படுத்த இயலவில்லை. ஏனெனில், என்னதான் கருத்தியலுக்கு அனுமதி வழங்கினாலும், திரைப்பட முதலாளிகளின் வணிக நோக்கம் இந்த 'சாகச நாயகனின்' பங்கினைக் குறைத்திட அனுமதிக்கவில்லை.

## காணாமல் போன கருத்தியல் நாயகியர்

இதைவிட விபரீதமாக எம்.ஜி.ஆருக்கு தேவர் பிலிம்ஸ் தொடர்பு 1956 ஆம் ஆண்டிலேயே 'தாய்க்குப் பின் தாரம்' படம் வழியாக உருவானது. இந்தத் 'தா' வரிசை திரைப்படங்கள் என்றறியப்படும் தேவர் பிலிம்ஸ் படங்கள் எம்.ஜி.ஆரின் 1960–களுக்குப் பின்னரான திரை இருப்புக் காலத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. மாடு, சிங்கம், புலி மற்றும் எம்.ஜி.ஆர். நடித்த தேவர் படங்களின் பிரதான நோக்கமே 'நல்லவர் / வல்லவர்' பிம்ப உருவாக்கமே.

எம்.ஜி.ஆருக்கு அவர் விருப்பப்படியான நூறு சதவீதமான அதிரடி / சாகச நாயகன் உருவாக்கம் இயல்பாக நிகழ்ந்தது. தாயை தெய்வமாக்கி வணங்கிய நாயகன், கூடுதலாக இளம் பெண்களை/ திரைப்பட நாயகியரைக் காட்சிப் பொருளாக்கிய விபத்தும் நிகழ்ந்தது.

இதன் மோசமான/ வேதனையான முரண், அதுவரை 'பராசக்தி' விமலாவாக, 'குணசேகரன்களை' திராவிடக் கருத்தியல் விளக்கங்களின் வழியாக உருவாக்கிய 'திராவிடச் சினிமாவின் பகுத்தறிவும் உரிமையும் விடுதலையும் பேசிய பெண்கள்' எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் காணாமல் போயினர் என்பதே. ஆனால், பெரும் சோகம் பெண்களின் உள்ளங் கவர்ந்த அதிநாயகன் எனப் பேசப்பட்டு, தமிழ் சினிமாவின் 'ஆண்மை மிக்கக் கவர்ச்சி நடிகர் எம்.ஜி.ஆர்.' எனும் பிம்பமும் அவருக்கு உருவானது என்பதே.

## எம்.ஜி.ஆர் கொன்ற நாயகி

ஐம்பதுகளின் பிற்பகுதியில் எம்.ஜி.ஆர். தனது திரைப்படங்களின் ஆக்கங்களில் முழுக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளத் தொடங்கினார். வணிகத் திரைப்படங்களின் இன்னொரு பிரதான தேவை கவர்ச்சிகரமான நாயகியர். அநேகமான தொடக்க கால திராவிட சினிமாக்களில் அதிகமான படங்களின் நாயகி பி.பானுமதி. அவரது பிரபலம் அவரது பாடல் திறன் வழியாக உருவானது, நடிப்பால் அல்ல. ஆனால், அதன் உப நல்விளைவாக எந்த ஆண் முன்னும் நாணிக் கோணி நிற்காத, வெட்கித் தரையில் கால் விரலால் கோலமிடாத அவரது முகபாவம், இயல்பாக சுயமரியாதை கொண்ட 'திராவிடப் பெண்' என்ற பிம்பத்தைக் கட்டமைத்தது. ஆண்டி விட்டுப் பெண்ணானாலும், அரசியானாலும் ஒரே உடல்மொழிதான்.

எம்.ஜி.ஆர். போன்ற அதிநாயகத்துவப் பிம்ப உருவாக்கத்தின் தேவை தன்னைக் கவர்ச்சிப் பாவையாக நாயகனுக்கு அர்ப்பணிக்கும் பெண், தான் அதனை வென்றெடுக்கும் அரிய வாய்ப்பு எம்.ஜி.ஆர். தயாரித்து / இயக்கிய 'நாடோடி மன்னன் 'மூலம் கிடைத்தது. தன் நோக்கத்துக்கு சாதகமாக இல்லாத பானுமதி எனும் பிரபல நடிகை ஏற்றிருந்த பாத்திரத்தை 'கொன்றார்', இயக்குநர்/ நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன்.

> **திரைப்படம் நெடுக எம்.ஜி.ஆர். கையில் ஒரு புத்தகத்தைப் படித்தபடி வருவார். அந்தப் புத்தகத்தின் முன் அட்டையில் காந்தி, பின் அட்டையில் அண்ணா. அநேகமாக அண்ணாயிஸமாக இருக்கலாம்.**

இதற்குப் பின்னர் அதே படத்தில் அறிமுகமானார் சரோஜாதேவி. சரோஜாதேவி - ஜெயலலிதா எனும் நடிகையர் பங்களிப்பில் உருவான எம்.ஜி.ஆர். எனும் 'ஆண்மை மிக்க' அதிநாயகத்துவமே அவரது பிம்பப் பொறியை உறுதிப்படுத்தியது.

எம்.ஜி.ஆர். எனும் எதிர் திராவிட நாயகன் உருவாக்கிய 'பாலியல் காட்சிப் பதுமைகள்' ஏராளம். அவர்களை எம்.ஜி.ஆர். திரையில் காட்சிப்படுத்திய விதம் விபரீதம். 'இங்கிலீசு படிச்சாலும் இன்பத் தமிழ் நாட்டிலே இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பளே', 'பொண்ணாப் பொறந்தா ஆம்பள கிட்ட கழுத்த நீட்டிக்கணும், ஒன்று ரெண்டு மூணு முடிச்சு போட்டா வாங்கிக்கணும்' இன்னும் உண்டு ஏராளம்.

## ஊர் கொடுத்த உத்தரவு

1969 ஆம் ஆண்டில் வெளிவந்த 'நம்நாடு' திரைப்படம் எம்.ஜி.ஆர். உருவாக்கிய திரை ஆவணம். அண்ணாவின் மறைவுக்குப் பின் வந்த திரைப்படம். திரைப்படத்தில் எம்.ஜி.ஆர். தேர்தலில் வென்று, ஊராட்சி / நகராட்சி மன்றத் தலைவர் ஆகிறார்.

அந்தப் படத்தின் தயாரிப்பாளர் நாகிரெட்டியின் கூற்றுப்படி, திட்டமிட்டு உருவாக்கப்பட்ட 'வாங்கய்யா வாத்தியாரய்யா' பாடலை திரையரங்கில் ரசிகர்கள் மாபெரும் ஆரவாரத்துடன் வரவேற்றதை, எம்.ஜி.ஆர். முன்வரிசைக் கதவருகில் நின்று பார்த்து விட்டு, "நாட்டை ஆள மக்கள் உத்தரவு கொடுத்து விட்டனர்" என்றாராம்.

திரைப்படம் நெடுக எம்.ஜி.ஆர். கையில் ஒரு புத்தகத்தைப் படித்தபடி வருவார். அந்தப் புத்தகத்தின் முன் அட்டையில் காந்தி, பின் அட்டையில் அண்ணா. அநேகமாக அண்ணாயிஸமாக இருக்கலாம். எம்.ஜி.ஆர். வாழும் வீட்டில் காந்தி, நேரு, படேல், ஆகியோர் படங்களுடன் அண்ணாவும் இருப்பார். இப்படியாக முழுமையடைந்தார் எம்.ஜி.ஆர். எனும் திராவிட எதிர் நாயகன்.

(திராவிட எதிர்நாயகத்துவம் தொடரும்).

...படம் விரியும்

## இந்தியாவுக்கு சிகிச்சை தரும் தமிழ்நாடு!

ஒருமித்த குரலோடு 'நீட்' தேர்வை எதிர்க்கும் தமிழ்நாட்டுக்குத்தான், மருத்துவம் பார்க்க இந்தியா முழுவதிலும் இருந்து அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வருகிறார்கள். சென்னை ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்குக் கடந்த ஓராண்டில் மட்டும் 27 மாநிலங்களைச் சேர்ந்த 4,032 பேர் மருத்துவச் சிகிச்சைகளுக்காக வந்துள்ளனர். 2022-ஆம் ஆண்டிலும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த 3,039 பேர் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆண்டுக்கு ஆண்டு இந்த எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. பிற மாநிலங்களில் அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும், மருத்துவச் செலவுகள் அதிகமாக இருப்பதுமே தமிழ்நாட்டை நோக்கி வர காரணமாகக் கூறப்படுகிறது.

அனைவருக்கும் அனைத்தும் என்ற லட்சியக் கோட்பாட்டோடு செயல்படும் நமது 'திராவிட மாடல்' ஆட்சியில் வெளி மாநில நோயாளிகள் என்ற பாரபட்சங்களுக்கு இடமில்லாமல், அனைவருக்கும் வழங்கும் தரமான சிகிச்சையை அவர்களுக்கும் வழங்குகிறது. புலம்பெயர் தொழிலாளர்களும் அரசு மருத்துவமனைகளை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். வெளிமாநில மக்கள் நம்பி வரும் நமது அரசு மருத்துவர்கள் பெரும்பாலும் நீட் தேர்வு வருவதற்கு முன்பே மருத்துவர்களானவர்கள். அவர்களை நம்பித்தான் இத்தனை மாநிலங்களில் இருந்தும் நோயாளிகள் வருகிறார்கள், குணமடைந்து செல்கிறார்கள். இந்த வளமான கட்டமைப்பை சிதைக்கத்தான் நீட் திணிக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

## :.ப்ளாஷ்பேக்



### கழக அலுவலகத் திறப்பு விழா!

இன்றைய கழகத் தலைவர் அவர்கள், இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது, திருப்பத்தூருக்கு கழக அலுவலகத் திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்தார். 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த நிகழ்வில் கழக அலுவலகத்தைத் திறந்து வைத்து, கொடியேற்றி வைத்து, தொண்டர்களை ஊக்கப்படுத்தும் உரையை அவர் ஆற்றினார். 2006 ஆம் சட்ட மன்றத் தேர்தலுக்கு எங்களை எல்லாம் தயார் படுத்தும் வகையில், அந்த நிகழ்வு அமைந்தது. அப்படியான தருணத்தில் அவருடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படமிது.



அல்ராஜ்

**-ஏ.அல்ராஜ், ஊராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர், பரமனந்தல் கிராமம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாருக்கு அம்பேத்கர் கொடுத்த விருந்து!

**1940 ஆம் ஆண்டு பெரியார் மும்பைக்கு தாராவியில் நடந்த கூட்டத்தில் அம்பேத்கரோடு கலந்துகொண்டு உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் அம்பேத்கரின் உரையை தமிழிலும், பெரியாரின் உரையை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தவர் அறிஞர் அண்ணா. இந்தக் கூட்டத்துக்கு முன்பாக பெரியாருக்கும் அவரோடு சென்றிருந்த குழுவினர் அனைவருக்கும் அம்பேத்கர் மிகப்பெரிய தேநீர் விருந்து வழங்கினார். இந்த விருந்தில் அன்றைய பம்பாய் நகரின் முக்கியப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். முந்தைய நாள் இரவும் பெரியாருக்கு அம்பேத்கர் விருந்து அளித்ததோடு, அவரோடு நீண்ட நேரம் உரையாடினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 362




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131



மாங்கனி நகராம் சேலத்தில்
2 வது இளைஞர் அணி
மாநில மாநாடு
வெற்றிமாநாடாக நிகழ்த்திட
உரையாற்ற வருகைதரும்
தலைவரே!
வெற்றி மாநாட்டை
நடத்திக் காட்டிடும்...
இளைஞரணி செயலாளரே!
வருக! வெல்க!!
ஏ.கே.எஸ்.விஜயன் Ex.M.P.
தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி
செயலாளர், தி.மு.க. விவசாய அணி
GS Designs




முரசொலி மாறன் அரங்கம்
பெத்தநாயக்கன்பாளையம், சேலம்
20.01.2024
தி.மு.க இளைஞர் அணி 2வது மாநில மாநாடு
இளைஞர் அணி சிறப்பு புகைப்படக் கண்காட்சியை
துவக்கி வைக்க வருகை தரும்
கழகத்தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாநாட்டுத் தலைவர்
கழக இளைஞர் அணி செயலாளர் – மாண்புமிகு அமைச்சர்
திரு.உதயநிதி ஸ்டாலின்
அவர்களே! வருக!! வருக!!! என அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்..
புகைப்பட நிபுணர்
கோவை சுப்பு
Subbu FOTOGRAFI




நாள் : 19.01.2024 வெள்ளிக்கிழமை
இடம் : பெரியகடைவீதி, திருச்சி
"ஊர்கள் தோறும் தி.மு.க."
திருச்சி கிழக்கு மாநகர தி.மு.க
சார்பில்
100-வது கொடி கம்பத்தில் கொடியேற்று விழா
கொடியேற்ற வருகை தரும்
மாண்புமிகு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களே
தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
மாண்புமிகு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA., அவர்களே
தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர்
வருக! வருக!!
மு.மதிவாணன் B.Sc.,
மாநகர கழக செயலாளர்
தலைவர், மண்டலம் – 3, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
திருச்சி மாநகர தி.மு.க
(கிழக்கு)


தி.மு.க.
இளைஞர் அணி
2 வது
மாநில மாநாடு
2024
மாநில உரிமை மீட்பு முழக்கம்
ஜனவரி 21, 2024
ஞாயிறு
சேலம்
பெத்தநாயக்கன் பாளையம்
YOUTH GUIDE OF TAMILNADU
அன்புடன் திருத்தணி எஸ்.சந்திரன் B.A.,L.L.B.,M.L.A.
மாவட்டக் கழகச் செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



ஜனவரி 21
சேலம் இளைஞரணி 2 வது மாநில மாநாட்டில்
அனைவரும் இணைவோம்
கலைஞர் 100
1924 - 2023
இருவண்ண
கொடியே...
எங்கள்
இதயக் கொடி...
அண்ணா அறிவாலயம்
SRI ARTS
ஊர்கள் தோறும் தி.மு.க. எனும்
தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படி 100வது கொடியினை ஏற்றி வைத்து,
அரசு நலத்திட்டங்களை வழங்கி,
திருச்சியில் 1000 பேருக்கும்,
தஞ்சையில் 1000 பேருக்கும்
பட்டா வழங்குகின்ற நிகழ்ச்சிக்கு வருகை தரும்
கழக முதன்மைச் செயலாளர் – தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
மாண்புமிகு. கே.என்.நேரு அவர்களை
விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் –தமிழ்நாடு வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
மாண்புமிகு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களை
வருக... வருக... என வரவேற்கிறோம்...
சு.கல்யாணசுந்தரம் MP
தஞ்சாவூர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
துரை.சந்திரசேகரன் MLA
தஞ்சாவூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர்
கா.அண்ணாதுரை MLA
தஞ்சாவூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் – தஞ்சாவூர் மாவட்ட பொறுப்பு அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க